
விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 11 வியாழக்கிழமை (25.06.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 188

## 13-வது சட்டமூலத்திற்கு மேலாக அதிகாரம் வழங்கப்படும்

# 180 நாட்களில் நலன்புரி முகாம்கள் மூடப்பட்டு மக்கள் சொந்த இடங்களுக்கு அனுப்பப்படுவர்

## இந்திய வெளியுறவு அமைச்சரிடம் இலங்கைக் குழு உறுதியளிப்பு

(புதுடில்லி)

இலங்கை அரசு முன்பு குறிப்பிட்டது போல 180 நாட்களில் நலன்புரி முகாம்களை மூடிவிட்டு அங்கிருக்கும் மக்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் மீள் குடியேற்றுவோம் என்று உறுதியளித்துள்ளது என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்துள்ளார். (14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடையை அமெ. மேலும் நீடித்தது

(கொழும்பு)

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அமைக்கப்படுமென விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பிரிவின் தலைவர் எஸ்.பத்மநாதன் அறிவித்துள்ள நிலையில், அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களின் பட்டியலில் விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்ந்தும் இடம்பெற்றுள்ளது.

விடுதலைப் புலிகள் வன்முறைகளைக் கைவிட்டமையை வரவேற்பதாகத் தெரிவித்திருக்கும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியான கிரேக் சுலிவான், விடுதலைப் புலிகள் சமாதான ரீதியில் தமது (14ஆம் பக்கம் பார்க்க)

## வணங்காமண் கப்பலில் வந்த பொருட்களை ஏற்க அரசு இணக்கம்

### இந்திய விஜயத்தின்போது முடிவு

(புதுடில்லி)

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த தமிழர்கள் அனுப்பிய உதவிப் பொருட்களை இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக ஏற்பதற்கு இலங்கை அரசு சம்மதம் தெரிவித்துள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் (14ஆம் பக்கம் பார்க்க)

## ஆளும் ஐ.ம.சு. கூட்டமைப்பு நேற்று வேட்பு மனுத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைத் தேர்தலுக்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நேற்று புதன்கிழமை வேட்புமனுத் தாக்கல் செய்தது. ஆளும் கூட்டணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்.

சமூக சேவைகள் மற்றும் சமூகநலன் புரித்துறை அமைச்சரும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடும் ஈ.பி.டி.பியின் பொதுச் செயலாளருமான டக்ளஸ் தேவானந்தாவும் உடனிருந்தார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் (14ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு இரு வாரங்களில் நியமனம்

- பட்டதாரிகளுக்கும் ஆசிரிய நியமனம் வழங்க ஏற்பாடு
- பாடசாலை அபிவிருத்திக்கு நிதி உதவி

## யாழ்.வந்த கல்வி அமைச்சர் உறுதிமொழி பல தந்தார்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களில் 325 பேர் ஆசிரிய உதவியாளர்களாக இரண்டு வாரங்களுக்குள் நியமிக்கப்படுவர் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பாக யாழ்.மாநகர சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுவை தாக்கல் செய்ய நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அக் கட்சியின் பொதுச்செயலாளரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜெயந்த யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற கல்வித்துறை சார்ந்த மாநாட்டில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில்,

**தொண்டர் ஆசிரியர்களுக்கு இரண்டு வாரங்களில் தீர்வு**

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களில் 325 பேரை ஆசிரிய உதவியாளர்களாக நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஆரம்பத்தில் 172 தொண்டர் ஆசிரியர்களுக்கு மட்டுமே ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. (02ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அரசு தெரிவித்த கவலைகளை இலங்கை அரசு தீர்த்து வைக்கும்

### புதுடில்லி சந்திப்புக்குப் பின் பசில் தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்திய வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பு ஆக்கபூர்வமான செய்தி ஒன்றைத் தந்துள்ளதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின் பின்னதான செயற்பாடுகள் இலங்கையில் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு (14ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே...**

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

**நாளை**

கொழும்பு றோயல் கல்லூரி ஆசிரியர் குழுவினால் தயாரிக்கப்பட்ட க.பொ.த. உயர்தரப் பரீட்சை கணக்கீடு

# வடபகுதியில் அமைக்கப்பட்டு இருப்பது முகாம்கள் அல்ல: அவை சிறைச்சாலைகள்



(கொழும்பு)

வட பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் முகாம்கள் பயங்கரமான நிலையிலிருப்பதாகத் தெரிவித்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க, பொது மக்கள் முகாம்களில் வாழ்வதை விட மர நிழல்களில் வாழ்வதற்கே அதிகம் விரும்புவார்கள் எனக் கூறினார்.

இந்த மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கு அனுமதி வழங்கப்படுமாயின் முகாம்களுக்குள் வாழ்வதை விட மரங்களின் கீழ் வாழ்வதற்கே அவர்கள்அதிகம் விரும்புவார்கள்.

இந்த முகாம்களில் பல வகையான நோய்கள் பரவுவதுடன் இந்த மக்கள் மத்தியில் சுகாதார வசதிகள் மற்றும் நீர் விநியோகம் குறைவாகவுள்ளது.

இந்தத் தருணத்தில் தமிழ் மக்களும் சமமாக நடத்தப்படுகிறார்கள் என்ற எண்ணம் தோற்றுவிக்கப்பட வேண்டுமெனவும் அவர் கூறினார்.

இந்த முகாம்கள் சிறைச் சாலையென்பதுடன் இது அனைவரும் வசிப்பதற்கான இடமல்ல எனவும் எஸ்.பி. திஸ்ஸா நாயக்க குறிப்பிட்டார்.

(ந-5)

## வழங்கற் கட்டளைகள் இன்று முதல் விநியோகம்

தொழில் ரீதியாக பாதிக்கப்பட்டோர் மற்றும் 2006 ஆகஸ்ட் 11ஆம் திகதிக்கு பின் இடம்பெயர்ந்தோருக்கான உலக உணவு திட்டத்தின் யூன் மாத நிவாரண விநியோகத்துக்குரிய வழங்கற் கட்டளைகள் சகல பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இன்று முதல் வழங்கப்படவுள்ளதாக யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் ம. பிரதீபன் அறிவித்துள்ளார். எனவே பலநோக்கு கூட்டுறவுச் சங்கங் கள் யாழ். மாவட்ட செயலக உலக உணவுத் திட்ட முகாமைத்துவ பிரிவில் இருந்து வழங்கற் கட்டளைகளைப் பெற்று உடனடியாக களஞ்சியத்திலிருந்து பொருட்களை முழுமையாக பெற்று விநியோக நடவடிக்கையினை ஆரம்பிக்குமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 13-வது திருத்தச் சட்டத்தினை இலகுவில் நீக்கிவிட முடியாது

## அரசு அறிவிப்பு

(கொழும்பு)

சில அரசியல் கட்சிகள் கூறுவது போன்று அரசியலமைப்பின் 13-வது திருத்தச் சட்டத்தை இலகுவில் நீக்கிவிட முடியாது.

அது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் நிறைவேற்றப்பட்டதுடன் அரசியலமைப்பில் இடம் பெறுகின்ற விடயமாகும். அது நீதிமன்றத்தில் அங்கீகாரம் பெற்ற சட்டமூலமாகவுள்ளது.

அதனை நீக்கவேண்டுமாயின் நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்படவேண்டும் என்று ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

மாகாண சபை முறைமையை எதிர்க்கும் மக்கள் விடுதலை முன்னணி ஏன் அந்தத் தேர்தலில் போட்டியிட்டு உறுப்பினர்களை பெற்றுக்கொண்டது. அப்படியானால் மக்கள் விடுதலை முன்னணியின் மாகாண சபை உறுப்பினர்கள் இராஜினாமா செய்துவிட்டு வந்து எதிர்ப்பு தெரிவிக்கவேண்டும்.

13-வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் அதேவேளை சர்வகட்சி பிரதிநிதிகள் குழு மூலம் முன்வைக்கப்படுகின்ற யோசனையின் பிரகாரம் தேசிய இணக்கப்பாட்டை எட்டி அதனை சர்வஜன வாக்கெடுப்புக்கு விட வேண்டும். இதுவே ஜனாதிபதியின் நிலைப்பாடு என்றும் அமைச்சர் கூறினார்.

ஊடகத்துறை அமைச்சில் நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். (ந-5)

# யாழ்ப்பாணக் கல்வி அபிவிருத்தியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்

## கல்வி அமைச்சரிடம் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கல்வி அபிவிருத்தியில் கல்வி அமைச்சு கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கேட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மாநாட்டில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்தவிடம் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை இக்கோரிக்கையை முன்வைத்தார். இது தொடர்பில் அவர் கேட்டுக் கொண்டதாவது, யாழ்.மாவட்டத்தில் இசுறு பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்ட போதும் தீவகக் கல்வி வலயத்தில் ஒரு பாடசாலையேனும் தெரிவு செய்யப்படவில்லை. இது தீவக கல்வி அபிவிருத்தியில் பின்னடைவை ஏற்படுத்தும்.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் கூடிய கவனம் செலுத்தப்படுவது அவசியம் என்றார்.

இதற்குப் பதிலளித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த,

யாழ்.மாவட்டத்திற்கு விரைவில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வளங்கள் அனைத்துப் பாடசாலைகளுக்கும் வழங்கப்படும் என்றார்.

(ந-5)

# யாழ்.வந்த கல்வி அமைச்சர்...

எனினும் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கமைய மீண்டும் அமைச்சரவைக்கு புதிய பத்திரம் தாக்கல் செய்து 325 தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்க அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களில் 325 பேருக்கு இரண்டு வாரங்களுக்குள் ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்குமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன்.

இவ்வாறு ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் வழங்கப்படும் ஆசிரியர்கள், ஆசிரிய கலாசாலைகள் ஊடாக பயிற்சியளிக்கப்பட்டு நிரந்தர ஆசிரியர் சேவைக்குள் இணைக்கப்படுவர்.

### பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்

வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு ஆசிரியர் நியமனம் வழங்கப்படாத பட்டதாரிகளுக்கு விரைவில் ஆசிரியர் நியமனம் வழங்குமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்வாறு ஆசிரியர் நியமனம் வழங்கப்படாதுள்ள 70 இற்கும் குறைந்த பட்டதாரிகளுக்கு விரைவில் நியமனம் கிடைக்கும். அத்துடன் வேலையற்ற பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்க வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு அறிவுறுத்தல் வழங்குவேன்.

### தேசிய பாடசாலைகளின் புனரமைப்புக்கு தீர்வு

தேசிய பாடசாலைகளான யாழ் .வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மற்றும் யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றில் காணப்படும் பல்வேறு புனரமைப்பு வேலைகளுக்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் அமைக்கப்பட்டு வரும் புதிய கட்டிடத் தொகுதி, கணினி ஆய்வுகூடம் ஆகியவற்றை விரைவில் அமைத்து முடிக்க நடவடிக்கை எடுப்பேன்.

### பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நியமனம்

ஆசிரியர் கலாசாலைகளில் பயிற்சி பெற்றவர்களில் ஆசிரியர் நியமனம் வழங்கப்படாத 17 பேர் யாழ் மாவட்டத்திலுள்ளதாக முறைப்பாடு செய்துள்ளனர்.

எனினும் இப்பிரச்சினை யாழ். மாவட்டத்தில் மட்டுமில் லாமல் நாடா ளா விய ரீதியில் காணப்படுவ தால் விரை வில் அமைச்சரவை பத்திரம் தாக்கல்செய்துஅனுமதிபெறப்படும். அதன் பின் நாடாளாவிய ரீதியில் இப் பிரச்சினை தீர்க்கப்படும். யாழ்.தேசிய கல்வி யியற் கல்லூரி மற்றும்ஆசிரிய கலா சாலைக ளில் பௌதிக வள அபி விருத்தி விரைவில் வெளி நாட்டு நிதி மூலங்கள் ஊடாக மேற் கொள்ளப்படும்.

### முகாம் மாணவர்களின் கல்வி மேம்பாடு

இடம்பெயர்ந்து யாழ். நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மூவாயிரம் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளின் மேம்பாடு குறித்து விசேட கவனம் செலுத்தப்படும்.

வவுனியா நலன்புரி முகாம் மாணவர்களுக்கு அண்மையில் 13 கோடி ரூபாய் பெறுமதியான கல்வி வளங்கள் வழங்கப்பட்டன.

அதே போன்று இங்குள்ள மாணவர்களுக்கும் விரைவில் வளங்கள் அனுப்பி வைக்கப்படும்.

### இசுறு, நவோதயா பாடசாலைகளின் அபிவிருத்தி

யாழ். மாவட்டதிலுள்ள இசுறு, நவோதயா பாடசாலைகளின் அபிவிருத்தி குறித்து துரித நடவடிக்கை எடுக்கப்படும். இசுறு பாடசாலை திட்டத்தில் யாழ். மாவட்டத்தில் 6 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அதன் அதிபர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இத் திட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பாடசாலைக்கும் தலா மூன்றரைக்கோடி ரூபாய் செலவில் அபிவிருத்தி செய்யப்படும்.

### அதிபர் நியமனங்களும் பதவி உயர்வுகளும்

இலங்கை அதிபர் சேவையிலுள்ள அனைத்துத் தரங்களிலும் பதவியுயர்வு விரைவில் வழங்கப்படும். அத்துடன் அதிபர் சேவை தரம் I இல் உள்ளவர்களில் 384 பேர் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு பதவியுயர்வு பெற தகுதிபெற்றுள்ளனர்.

அத்துடன் இலங்கை அதிபர்சேவை தரம் 2-II உள்ளவர்களுக்கு தரம் 2;I இற்கு பதவியுயர்வு வழங்கப்படவுள்ளது.

இதே போன்று ஏனைய தரங்களிலும் பதவியுயர்வு வழங்குவதுடன் புதிதாகவும் ஆசிரியர் சேவையிலுள்ளவர்கள் இலங்கை அதிபர் சேவைக்கு உள்வாங்கப்படுவர்.

### ஆசிரியர் பதவியுயர்வு

இலங்கை ஆசிரியர் சேவை பதவியுயர்வு வழங்குவதில் தென்பகுதியை விட வடக்கு மாகாண கல்வி நடவடிக்கைகள் சிறப்பாக உள்ளது.

அத்துடன் இலங்கை ஆசிரியர் சேவை பதவியுயர்வு தொடர்பான புதிய சுற்று நிருபங்கள் வெளி யிடப்பட்டுள்ளன. எனினும் கல்வி அமைச்சில் தமிழ் மொழி பெயர்ப்பாளர் பற்றாக்குறை என்பதனால் தமிழ் மொழியில் சுற்று நிருபம் வெளியாவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இதனால் யாழ் . மாவட்ட பாடசாலைகளுக்கு குறித்த சுற்று நிருபங்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டிருக்கும். எனினும் தமிழ் மொழி மூலமான சுற்று நிருபம் விரைவில் மாகாண கல்விப் பணிப்பாளர் ஊடாக அனுப்பி வைக்கப்படும்.

### புதிய பாடநூல் விநியோகம்

2010 புதிய பாடத்திட்டத்திற்கு அமைய பாடநூல்கள் இவ்வாண்டு இறுதிக்குள் அனைத்து பாடசாலை களுக்கும் விநியோகிக்கப்படுவதுடன் சீருடைத் துணியும் வழங்கப்படும்.

### மேலதிக ஆசிரியர்கள்

யாழ்ப்பாணத்தில் நான் இன்று சென்ற பாடசாலை ஒன்றில் 28 ஆசிரியர்கள் மேதிகமாக உள்ளமையை அவதானித்தேன். பின்னர் இது தொடர்பில் அதிகாரிகளுடன் ஆராய்ந்தபோது வன்னி பாடசாலைகளில் கடமையாற்றி யாழ் பாடசாலைகளில்தற்காலிக இணைப்பிலுள்ளவர்கள் என்பதனை அறிந்தேன்.

இவ்வாறு தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்கள் விரைவில் அவர்களுக்கு நிய மனம் வழங்கப்பட்ட பாடசாலைகளில் இணைக்கப்படுவர் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

(ந-5)


## 45-ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 02 ✲ 11 ✲ 1948



இறப்பு 12 ✲ 05 ✲ 2009

### அமரர் சு.கந்தசாமி தர்மகுலசிங்கம்

(நிர்வாக அதிகாரி சுகாதார வைத்திய பணிமனை ,முல்லைத்தீவு)

கடந்த 12-05-2009 அன்று இறைபதமடைந்த எமது அன்புத்தெய்வம் கந்தசாமி தர்மகுலசிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று 25-06-2009 வியாழக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் , அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வராகி. கோவிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

இங்ஙனம்; குடும்பத்தினரும்,
இ.கிருபாகரனும் (சகோதரன், நோர்வே)

(2876)



## விற்பனையாகிறது

சிறுவர்களுக்கான 150க்கும் மேற்பட்ட CDக்கள்மற்றும் 100 வகையான DVD க்கள் தமிழ், ஆங்கிலம் உட்பட இலங்கையின் சகல வெளியீட்டுப் பிரிவுகளின் "சிறுவர் நூல்கள்" - மலிவு விலையில்

**அன்னை புத்தகசாலை,**

**இல .7 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.**

தொ.பே: 2229881

(c-2667)

# இன்று ஒரு தகவல்

## கோபம் - ஒரு விளக்கம்

"எனக்கு யாரைப் பார்த்தாலும் எரிச்சலாக இருக்கிறது" என்று சொல்லுவார் ஒருவர்.

அவர் எப்பொழுதும் கோபத்தில் தான் இருப்பார்.

இப்படிப்பட்டவர்களை யாரும் நெருங்க மாட்டார்கள். இவர்களுக்கிருக்கும் பெயரும் புகழும் போய்விடும்.

"கோபம் வந்துவிட்டால் மனிதனுக்கு பிறத்தியாருடைய குண நலன்கள் தெரிவதேயில்லை" என்கிறார் மகாவீரர்.

கோபம் வரும்போது நமக்குப் பிரியமானவர்கள் கூட ஓர் இமைப் பொழுதில் பகைவர்களாகி விடுகிறார்கள்.

தீயானது எரியக்கூடிய பொருட்களை எரித்து விட்டுத்தான் அடங்கி விடுகிறது. அதேபோல் கோபமும் மனிதனை அழித்து விட்டு அடங்கிப் போய் விடுகிறது.

மகாவீரரின் கருத்தை விளக்குவது போல் சுவாமி சின்மயானந்தர் ஒரு கதை சொல்லியிருக்கிறார்.

அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஒருவர் இருந்தார். அவருக்கு காலையிலிருந்து கடுமையான வேலை. பலவிதமான பிரச்சினைகள். அந்தச் சமயம் பார்த்து மனேஜர் அவரைக் கூப்பிட்டுத் திட்டினார். இவர் முகத்தை 'உம்' என்று வைத்துக் கொண்டு தனது இருக்கைக்கு வந்தார்.

வேலையும் ஓடவில்லை. யாரைப் பார்த்தாலும் கோபமாக வந்தது.

அட்டெண்டர் மீது சீறி விழுந்தார். அந்த ஊழியரும் எதிர்த்துப் பேசவில்லை. முகத்தைத் திருப்பிக் கொண்டு போய் விட்டார். மனேஜர் எப்பொழுது புறப்படுவார் என்று பார்த்துக் கொண்டிருந்தார். அவர் கிளம்பியவுடன் இவர் கிளம்பினார்.

வழக்கமாக வீட்டுக்கு பஸ்ஸில் போறவர் நடந்தே கிளம்பி விட்டார். மனம் குமுறிக் கொண்டே இருந்தது. நேரில் எதிர்த்துப் பேச முடியாத மனேஜரை மனதுக்குள் திட்டிக் கொண்டு வந்தார்.

வீட்டு வாசலில் அவருடைய குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். தூரத்தில் அப்பா வருவதைப் பார்த்ததும் உள்ளே ஓடிப்போய் அம்மாவிடம் சொன்னார்கள். அந்த அம்மா ஜன்னலில் இவரைப் பார்த்தார். கோபமாக வருவது தெரிந்தது. இந்த நேரம் பிள்ளைகள் வாசலில் சத்தம் போட்டு விளையாடிக் கொண்டிருந்தால் அடித்தாலும் அடித்து விடுவார் என்று பயந்து கொண்டு பிள்ளைகளை பக்கத்து வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

அவர் வந்தார். வாசலில் பிள்ளைகள் இல்லை. அமைதியாக இருந்தது. அவருடைய கோபத்துக்கு வடிகால் கிடைக்கவில்லை.

சத்தம் போட்டால் தானே திட்ட முடியும். வாசலில் கேற் திறந்து வைக்கப்பட்டிருந்தது. அது மூடியிருந்தாலும் ஏன் திறந்து வைக்கவில்லை என்று சத்தம் போடலாம். அதற்கும் வாய்ப்பில்லை.

வீடு சுத்தமாக இருந்தது. அந்தந்த சாமான் அந்தந்த இடத்தில் வைக்கப்பட்டிருந்தது. "அதனால் என்ன இது... வீடிருக்கிற இலட்சணம்" என்று சத்தம் போடக் கூட சந்தர்ப்பம் இல்லை.

அவர் வழக்கமாக உட்காரும் நாற்காலிக்கு மேல் மின் விசிறி அளவாக போடப்பட்டிருந்தது. 5 நிமிடம் போய் உட்கார்ந்தார். எதிரில் ஒரு ஸ்ரூலில் கோப்பி வைக்கப்பட்டிருந்தது.

அதுவும் சரியான சூட்டில் இருந்தது. அதற்கும் அவரால் எரிந்து விழ முடியவில்லை. என்ன செய்வது? கோப்பியைக் குடித்தார். அதில் சீனி இல்லை. அப்பாடா சான்ஸ் கிடைத்து விட்டது.

அடியே... எங்கே தொலைந்து போனாய்... நாள் முழுவதும் கஷ்டப்பட்டு உழைத்துவிட்டு வந்திருக்கிறேன். எனக்கு கோப்பி கொடுக்கும் இலட்சணம் இதுதானா? ஏன் சீனி போடவில்லை? உங்கள் பாட்டன் வீட்டு சொத்தா குறைந்து போய் விடும்?" என்று கத்த ஆரம்பித்தார்.

அந்த அம்மா அலட்டிக் கொள்ளாமல் நடந்து வந்தார்.

கோப்பையில் கிடந்த கரண்டியால் கோப்பியைக் கலக்கி விட்டு கரண்டியை எடுத்துக் கொண்டு பேசாமல் போய் விட்டார்.

இப்பொழுது இவர் கோப்பியை எடுத்து குடித்தார். இனிப்பு அளவாக இருந்தது.

சீனி அடியில் தான் இருந்திருக்கிறது. அதை கலக்காமல் குடித்திருக்கிறார். அவ்வளவு தான்.

வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது இப்படித்தான் மறைந்து இருக்கிறது. அதை உண்மையாக அனுபவித்து சந்தோஷப்பட வேண்டுமானால்...

மனத்தை அவ்வப்போது சோதனை செய்து கலக்கி அந்த இனிமையை வெளியில் கொண்டு வரவேண்டியிருக்கிறது என்கிறார் சுவாமி சின்மயானந்தர்.

கோபம் வந்துவிட்டால் மனிதனுக்கு பிறத்தியாருடைய குணநலன்கள் தெரிவதேயில்லை என்றும் மகாவீரரின் வாக்கு எவ்வளவு உண்மை என்பது இந்தக் கதையில் இருந்து தெரிகிறதல்லவா!

"எனக்குக் கல்யாணமாகி ஏழுவருடங்கள் ஆகிறது. என் மனைவி கோபத்தில் என்னை எவ்வளவு திட்டினாலும் பதிலுக்கு நான் திட்டியதே இல்லை" என்றார் ஒருவர்.

"அதெப்படி உங்களால் முடிகிறது?" என்றேன்.

"பதிலுக்கு நான் திட்டுவதற்கு இதுவரை எனக்கு சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. அவள் நிறுத்தினால் தானே நான் ஆரம்பிக்க முடியும்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் நடத்தப்பட்ட க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் புள்ளி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 25 மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

### 2010 உயிரியல் பிரிவு

பி. கோகுலன் (ஹாட்லிக் கல்லூரி), ஏ. நிதர்சன் (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), எஸ். விதுரன் (ஹாட்லிக் கல்லூரி), எஸ். கஜனன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), வி. அரவிந்தன் (நெல்லியடி ம.வி.), பி. துஷ்யந்தன் (சென் ஜோன்ஸ் கல்லூரி). எஸ். சஜிதா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), வி. நிசாந்திகா (வேம்படி பெண் கள் உயர்தரப் பாடசாலை), எம். கோபிகா (உடுப்பிட்டி அ.மி. கல்லூரி), ஏ. பகீரதி, ஆர். ஹம்சத்வனி (வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை), எம். பார்த்தீபன் (ஹாட்லிக் கல்லூரி).

எல். ஸ்ரீநிகேதன் (கொக்கு வில் இந்துக் கல்லூரி), ரி. சுதாசினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), எஸ். றுக்சிகா (வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை), கே. சிவசுதன் (ஹாட்லிக் கல்லூரி), எஸ். கேனகா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ஜி. அனுசியா, ரி. ஜயந்தன் (உடுப்பிட்டி அ.மி. கல்லூரி), ஆர். துவாரகா, எஸ். யசோதரா (வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை), ரி. கிருஷ்ணப்பிரியா (யாழ். இந்து மகளிர் கல்லூரி). ஏ. கோகுலரூபன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), யு. நிவேதிகா, ரி. கௌசிகா (வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை).

### 2010 கணிதப் பிரிவு

ரி. பிரணவன், ஏ. ஹரிகாலன் (ஹாட்லிக் கல்லூரி), எஸ். சுமங்கலி (வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை), பி. விஷ்ணுசாந் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஏ. சஜீவன் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), என். நிலூசியா (மெதடிஸ்த பெண்கள் பாடசாலை), எஸ். சிவராம், எஸ். ரஜீபவன் (ஹாட்லிக் கல்லூரி), கே. மயூரேசன் (உடுப்பிட்டி அ.மி. கல்லூரி).

கே. டர்சன் (யாழ்ப்பாணக் கல்லூரி), எஸ். கௌசல்ஜன் (சென் ஜோன்ஸ் கல்லூரி), கே. ஸ்ரீகுமார் (ஹாட்லிக் கல்லூரி), ஏ. அனற் நிசாந்தா (வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை), கே. உபமன்யு (சென் ஜோன்ஸ் கல்லூரி), எஸ். ஜெயராம் (ஹாட்லிக் கல்லூரி), ஆர். செல்வ பவிதா (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி).

வி. நிரூபன் (உடுப்பிட்டி அ.மி. கல்லூரி), எஸ். வசந் (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ். அபர்ணா (உடுப்பிட்டி அ.மி. கல்லூரி), ரி. ஆரன்ஜா (நெல்லியடி ம.வி), எஸ். கௌதமன் (சென் ஜோன்ஸ் கல்லூரி), பி. கீர்த்தனன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), கே. பிந்துஜா (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ். அருளினி (நெல்லியடி ம.வி), என். பவீந்திரன் (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி).

### 2009 வர்த்தகப் பிரிவு

ஆர். நிதர்சன் (சென் ஜோன்ஸ் கல்லூரி), கே. சக்திநாயகி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ரி. சோபிதா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), கே. குபேந்திரன் (உடுப்பிட்டி அ.மி. கல்லூரி), எஸ். சிந்துஜா (வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை), எஸ். சிவகாமி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

எஸ். சபினா (கனகரத்தினம் ம.வி.), என். லக்சனா (யூனியன் கல்லூரி), ஏ. அன்ரனி ஜோன்ஸன், ஆர். வருணன் (ஹாட்லிக் கல்லூரி), கே. நகோபி (வட்டு. இந்துக் கல்லூரி), எஸ். பிரகணன் (யாழ். இந்துக் கல்லூரி), ரி. கீதாஞ்சன் (சென் ஜோன்ஸ் கல்லூரி), எஸ். தேவகி (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

எஸ். கவிதா (பண்ணாகம் மெய்கண்டான் ம.வி) , வி. அர்ச்சனா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), வி. பிரியங்கா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ஜே. ஜெஸ்லி (சென் பற்றிக்ஸ் கல்லூரி), என். கீர்த்திகா (யூனியன் கல்லூரி), எஸ். சோபிகா, ஜே. லேகா, (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ஐ. ரி. எமிர்சன் (சென் பற்றிக்ஸ் கல்லூரி), ஜி. அனுசியா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), எஸ். துவாரகா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), எஸ். ஜெயபிரபாகரன் (மகாஜனாக் கல்லூரி.

### 2010 வர்த்தகப் பிரிவு

ஏ. தர்சினி (அருணோதயாக் கல்லூரி), பி. ராஜாராம் (ஹாட்லிக் கல்லூரி), ஆர்.ஜீவகி, வை. சரணியா, என். வினோஜா (வட இந்து மகளிர் கல்லூரி), கே. சுயாதா (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஆர். தர்சினி (இளவாலை மடம் ம.வி), வி. தர்சிகன் (ஹாட்லிக் கல்லூரி), ஏ. அகல்யா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

எஸ். கிரிதரன் (கொக்கு வில் இந்துக் கல்லூரி), எம். பிரியங்கா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), வி. விஜிதா, ஜி. மாலினி (வட இந்து மகளிர் கல்லூரி), ஜே. ஜே. கொலின்டன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), என். கிரிசாந்தி (வட்டு. இந்துக் கல்லூரி), ஏ. கோகுலன் (நெல்லியடி ம.வி).

பி. கஸ்தூரி (உடுப்பிட்டி அ.மி. கல்லூரி), என். டிலக்ஸி (கொக்குவில் இந்துக் கல்லூரி), ரி. மோகலன் (யாழ்ப்பாணக் கல்லூரி), ஆர். பவித்திரா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ஏ. நர்மதா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), வி. பிரியங்கா (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), ஆர். ஜீவகி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ரி. தனசாந்தி, ரி. திலா ஜிகி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி). (ஓ-6)

## நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்தக் கோரிக்கை

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பராமரிப்பு அற்று காணப்படும் காணிகள், பற்றைகளிலிருந்து மலேரியா, சிக்கன்குனியா போன்ற நோய்களை பரப்பும் நுளம்புகள் பெருகுவதை பிரதேச சபையினர் அவதானித்துள்ளனர்.

மேற்படி காணிகளின் உரிமையாளர்கள், குடியிருப்பாளர்கள் பராமரிப்பற்றுள்ள காணிகளை துப்புரவாக்கி நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்த உதவுமாறும் தவறினால் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதேச சபைச் செயலாளர் எம்.ஜே. சாந்தசீலன் அறிவித்துள்ளார். (ஓ-36)

## இராசி பலன்

25.06.2009
(ஆனி 11, வியாழக்கிழமை)
திருதியை முன்னிரவு 6.59 மணிவரை
பூசம் முன்னிரவு 8.10 மணிவரை
இராகுகாலம் 1.25-2.55 மணிவரை
சுபநேரம் 7.25-8.55மணிவரை
அமிர்தசித்தம்

| | |
|---|---|
| மேடம் | உடல் நலக்குறைவு, தொழில் ஆர்வம், முயற்சி தாமதம், சகோதரர் உதவி. |
| இடபம் | பிரயாண நன்மை, காரிய ஜெயம், தனலாபம், நல்ல செய்தி. |
| மிதுனம் | விவாதம், உஷ்ண நிலை, மாதர் நட்பு, முயற்சி தாமதம். |
| கடகம் | நண்பர்கள் உதவி, தெய்வ சிந்தை, தொழில் ஆர்வம், போசன சுகம். |
| சிங்கம் | காரிய அலைச்சல், பெரியோர் உதவி, எதிர்பாராத நன்மை, சயன சுகக்குறைவு. |
| கன்னி | முயற்சி கைகூடும், தனதானிய சேர்க்கை, கலந்துரையாடல், தேகநலன். |
| துலாம் | பிறர் உதவி, சுபநிகழ்வு, ஆரோக்கிய நிலை, தொழில் மேன்மை. |
| விருச்சிகம் | உடல் உழைப்பு, ஆரோக்கியக் குறைவு, புதிய திட்டமிடல், பிரயாணம். |
| தனுசு | எதிர்பாரத பகை, முயற்சி தாமதம், பணக்குறைவு, உறவினர் சந்திப்பு. |
| மகரம் | அபூர்வ சந்திப்பு, பண வருவாய், குடும்ப மகிழ்ச்சி, பிரயாண நன்மை. |
| கும்பம் | சத்துரு ஜெயம், செய் தொழில் விருத்தி, நல்ல செய்தி, முயற்சி கைகூடும். |
| மீனம் | காரிய இடையூறு, பணக்குறைவு, போசன சுகம், பூர்வ புண்ணிய கருமம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70-90 | 70-100 | 60 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 60 |
| தக்காளி | 400 | 400 | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 50-80 | 80 | 80 |
| கோவா | 140 | 160 | -- |
| கரட் | 120 | 130 | 120 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 50 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 70 | 40-50 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 100 |
| பாகற்காய் | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 40-60 | 40-60 | 60 |
| கரணைக் கிழங்கு | 70 | 90 | -- |
| பயிற்றங்காய் | 80 | 100 | 60 |
| லீக்ஸ் | 100 | 140 | 120 |
| பீற்றூட் | 50 | 70 | 60 |
| கறிமிளகாய் | 60 | 80 | 60 |
| முருங்கைக்காய் | 300 | -- | 500 |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 10 |
| தேசிக்காய் | 120 | 140 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 25 |





கல்விசார் சுகாதார விழிப்புணர்வுக் கண்காட்சி நேற்று யாழ்.முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் மங்கல விளக்கேற்றுவதையும், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் நாடாவெட்டி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், விருந்தினர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலக செய்தியாளர்)

## நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் ஆசிரியர் நியமனத்திற்கு தெரிவு செய்யப்பட்டு நியமனம் வழங்கப்படாத யாழ்.மாவட்ட பட்டதாரிகளுக்கு கல்வி அமைச்சருடனான சந்திப்புக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு தமது மனமார்ந்த நன்றிகளை யாழ்.மாவட்ட பட்டதாரிகள் செயற்குழு தெரிவித்துள்ளது.

இதன் போது கல்வி அமைச்சர் எதிர்வரும் இரு வாரங்களில் நியமனக் கடிதத்தை வழங்க ஏற்பாடு செய்வதாக உறுதி மொழி வழங்கியுள்ளதாகவும் யாழ்.மாவட்டப் பட்டதாரிகள் செயற்குழு தெரிவித்துள்ளது. (ஓ-4)

## ஆங்கில தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் சென் பெனடிக்ற் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் வித்தியாலய ஆங்கில தின நிகழ்வுகள் எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது .

பிரதம விருந்தினராக யாழ் .வலய ஆசிரிய ஆலோசகர் சி.தயாகரன் கலந்துகொள்ளவுள்ளதாக பாடசாலை அதிபர் அருட்சகோதரி மரியமலர் ஜோசப் தெரிவித்துள்ளார் (ஓ-30)




## யாழ்.செய்திகள்

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கரவை தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலய வரலாற்று நூல் வெளியீடு நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள அகில இலங்கை இந்துமாமன்ற மண்டபத்தில் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூல் மதிப்புரையை சைவப் புலவர் இராசையா ஸ்ரீதரன், நூல் ஆய்வுரையை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியை சைவப்புலவர் நமசிவாயம் கல்யாணி ஆகியோர் வழங்கவுள்ளனர். (ஓ-4)

## வளர்ப்பு நாய்களுக்கு நிரந்தர கருத்தடை சத்திர சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் யாழ்.நகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பகுதியில் முதல்கட்டமாக விலங்கு விசர்நோய் கட்டுப்பாடு தொடர்பாக எடுத்து வரும் முயற்சியின் பிரகாரம் J/81 யாழ். கோட்டை மீனாட்சி அம்மன் கிராமத்தில் கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வளர்ப்பு நாய்களுக்கு அரசாங்க மிருக வைத்தியர்களின் உதவியுடன் நிரந்த கருத்தடை சந்திர சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

இதில் 13 ஆண் நாய்களும் 14 பெண் நாய்களும் உள்ளடங்கலாக 27 நாய்களுக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (ஓ)

## மத்திய-மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் 10 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் 10 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் சங்கத் தலைவர் இ.இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம், யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ, யாழ்.சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்; யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், கோப்பாய் பிரதேச செயலர் ஏ.சி.மோகன்றாஸ், பருத்தித்துறை பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன், யாழ்.கடற்றொழில் நீரியல் வளத் துறை திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் கே.தர்மலிங்கம், வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத் தலைவர் எஸ்.குலசிங்கம், முன்னாள் சங்கத் தலைவர் ரி.கே.இராஜேந்திரராவ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும் நிகழ்வில் அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற அங்கத்தவர்கள் கௌரவிக்கப்படவுள்ளதுடன் சங்கத் தலைவர் இ.இரத்தினசிங்கம் பிரேரணைகளை முன்வைக்கவுள்ளார்.அத்துடன் புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெறவுள்ளது.

மேலும் சங்கத்தின் அங்கத்துவம் பெற்றிருக்கும் அனைவரும் இக் கூட்டத்தில் கலந்து கொள்வார்களென்ற எதிர்பார்ப்பில் அனைவருக்கும் மதியபோசன உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் அனைத்து அங்கத்தவர்களும் தவறாது கலந்து கொள் ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பங்குபற்றும் சகல அங்கத்தவர்களுக்கும் தாபன விதிக்கோவை அத்தியாயம் XXV பிரிவு 2:1 இன் பிரகாரம் உரித்தான ஒருநாள் கடமை விடுமுறையைப் பெற்று மேற்படிகூட்டத்தில் கலந்துகொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-4)

## தேசிய அடையாள அட்டைகள் வழங்குவதற்கான நடமாடும் சேவை

### யூலை 6 இல் இருந்து 9 வரை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் தேர்தல்களில் வாக்களிக்கும் அனைவருக்கும் தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் இதுவரை தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ளாதோருக்கு யூலை மாதம் 6 ஆம் திகதியிலிருந்து 9ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் நல்லூர் ஆகிய பிரதேசங்களில் நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது .

இந்த நடமாடும் சேவையின் போது கிராம அலுவலர்கள் தத்தம் பிரிவுக்குட்பட்ட தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்போரை இனங்கண்டு அவர்களின் விபரங்களை பிறப்பத்தாட்சிப் பத்திரத்துடன் அனுப்பிவைக்குமாறு அவ்வவ் பிரதேச செயலகங்களுக்கு யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஓ-30)

## வீதி விஸ்தரிப்புப் பணியில் ஈடுபடுவோருக்கு வேகக்கட்டுப்பாடற்ற வாகனங்களால் சிரமம்

(காரைநகர்)

காரைநகர் பொன்னாலைப் பாலத்தின் ஊடாக பயணிகள் பஸ்கள் மிக வேகமாக செல்வதனால் வீதி அகலாமாக்கும் பணியின் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் அசௌவுகரியங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

காரை நகர் - பொன்னாலை பாலவீதி ஆசிய அபிவிருத்தி வங்கியின் 400 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் அகலமாக்கப்பட்டு புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இப் புனரமைப்புப்பணியில் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் 10ற்கும் மேற்பட்ட இயந்திர சாதனங்களும் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

இதனால் இவ் வீதியில் வீதி புனரமைப்புப் பணிக்கான குறியீடுகளும் 8 கிலோ மீற்றருக்குள் மெதுவான வேகத்தில் செல்ல வேண்டிய குறியீடுகளும் இடப்பட்டுள்ள போதும் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களும் தனியார் சிற்றூர்திச் சங்க பயணிகள் பஸ்களும் வேகமாகப்பயணிக்கின்றன.

இதனால் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கு அசௌகரியங்கள் ஏற்பட்டு வருகின்றன. சில சமயங்களில் வாகனத்தை நிறுத்துமாறு சிவப்பு நிற சமிக்ஞை காட்டினாலும் அதனைப் பொருட்படுத்தாது செல்வதனையும் அவதானிக்க முடிகின்றது. மிகவும் குறுகிய காலத்தினுள் விரைவாக இவ் வீதி புனரமைப்புப் பணிகள் நிறுவு வதற்கு பயணிகள் பஸ்கள் மற்றும் சிறிய வாகனங்களில் செல்வோர் விதிமுறை களைப் பின்பற்றி வீதித் தொழிலாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-246)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு-சொர்ணவடலி அருள்மிகு ஸ்ரீ சொர்ணசித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

இதில் ஜூலை மாதம் 6ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை10 மணிக்கு தீர்த்தோற்சவமும்,மாலை 5மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

அரியாலை வெட்டுக்குளம் அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதில் ஜூலை மாதம் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை காலை 11.30 மணிக்கு தீர்த்தோற்சவமும், மாலை 5.30 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

✠✠✠

(சித்தன்கேணி)

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் யூலை மாதம் 4ஆம் திகதி சனிக்கிழமை காலை சங்காபிஷேகமும் மாலை இடபவாகனத் திருவிழாவும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு இரதோற்சவமும் மறு நாள் முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (ஓ-17)

✠✠✠

நீர்வேலி அருள்மிகு ஸ்ரீ செல்லக் கதிர்காம சுவாமி திருக்கோவிலின் வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் இடம்பெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் யூன் 6 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலயப் பிரதமகுரு நீர்வைமணி கு. தியாகராஜக் குருக்களால் பாம்பன் சுவாமிகள் அருளிய சண்முககவசம் நூல் பதிப்பாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. (ஓ)

## செயலமர்வும் கருத்தரங்கும்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வாசிப்பு முகாம் பற்றிய செயலமர்வும், கருத்தரங்கும் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 4மணிவரை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித் துள்ளார். (6-29)

## இடம்பெயர்ந்தோருக்கான ஊழியர் நம்பிக்கை நிதிய உதவி

(கொழும்பு)

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது வவுனியாவிலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்போரின் நலன்புரி விடயங்களைக் கவனிக்க ஊழியர் நம்பிக்கை நிதிய சபை ஒரு கோடி ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளது.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இதுதொடர்பான வைபவத்தின் போது ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் கே.எம்.ஏ.கொடவத்த இந்நிதியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தார்.

இந் நிதியின் மூலம் இடம்பெயர்ந்துள்ள ஊழியர் நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களின் அத்தியாவசியத் தேவைகளும் பூர்த்தி செய்யப்படவுள்ளன. கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களிலுள்ள ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் 102 கிளைகளில் மாத்திரம் 2 ஆயிரத்து700 பேர் கடமையாற்றி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# நலன்புரி நிலையங்களுக்கு உதவும் வெளிநாடுகள் நிதியை அரசிடமே கையளிக்க வேண்டும்

## அமைச்சர் சமரசிங்க வலியுறுத்தல்

(கொழும்பு)

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுளுக்கு உதவி செய்வதாயின் வெளிநாடுகள் இலங்கை அரசாங்கத்திடமே நிதியை கையளிக்கவேண்டும். அகதி மக்களுக்கு உதவிகளைச்செய்வது தொடர்பில் அரசாங்கம் வடிவமைத்துள்ள கட்டமைப்புக்குள்ளேயே வெளிநாட்டு உதவிகள் அமையவேண்டும்.

எமது கோரிக்கையை ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேச நாடுகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

வவுனியாவில் தங்கியுள்ள இடம்பெயர்ந்துள்ள மக்களின் நிலைமை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். இவ்விடயம் தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

நலன்புரி நிலையங்களில் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஐ.நாவின் முகவர் நிலையங்களும் தெரிவித்துள்ளன. இந்நிலையில் அம் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை எதிர்வரும் நாட்களில் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். ஆனால் அகதி மக்களுக்கான அனைத்து வசதிகளையும் நாங்கள் செய்து கொடுத்து வருகின்றோம். அண்மையில் நான் இத்தாலிக்கு விஜயம் செய்திருந்தேன். அங்கு கடந்த ஏப்ரல் மாதம் ஏற்பட்ட பூமியதிர்ச்சி காரணமாக சுமார் 70 ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

அங்கு இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்கியுள்ள அக்கிலா என்ற கிராமத்துக்கு ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட எந்தவொரு அரச சார்பற்ற நிறுவனத்துக்கும் செல்வதற்கு அனுமதியில்லை. ஆனால் நாங்கள் ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்கியுள்ள அனுமதியுடன் இதனை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேச நாடுகள் இந்த விடயங்களை விளங்கிக் கொள்ளவேண்டும். இலங்கைக்கு உதவிகள் செய்வதாயின் நேரடியாக நிதியை எமக்கு வழங்கவேண்டும். இலங்கை அரசாங்கத்தின் கட்டமைப்பின் ஊடாகவே உதவிகள் வழங்கப்படலாம். எமக்கு உதவிகள் வேண்டாம் என்று நாங்கள் கூறவில்லை. ஆனால் எமது கட்டமைப்பின் ஊடாகவே உதவிகள் வழங்கப்பட வேண்டும். இது எமது உள்நாட்டு விவகாரம். எனவே இவ்விடயம் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் உரிமை எமக்கு இருக்கின்றது என்பதனை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். (ஓ-6)






மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் கலாசாரப் பிரிவில் பங்காற்றி வரும் மாணவிகள் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி அடைந்தமையைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத் தலைவர் லயன் எஸ்.எஸ்.ஜெயராஜ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண உதவிப் பொருளாளர் லயன் எஸ்.எஸ்.தங்கராசா, மாவட்ட இணைப்பாளர் லயன் டாக்டர் வை.தியாகராஜா ஆகியோர் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதைப் படங்களில் காணலாம்.

## போரூட் நிறுவனத்தினால் உணவுப் பொதிகள் கையளிப்பு

தென்மராட்சிப் பிரதேசத்தில் கிராம அலுவலர்களால் சிபாரிசு செய்யப்பட்ட 668 பயனாளிகளுக்கு போரூட் நிறுவனத்தினர் தென்மராட்சிப் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் வைத்து உலர் உணவுப் பொதிகளை வழங்கினர். பயறு, அரிசிமா, நூடில்ஸ்,அங்கர் பால்மா போன்ற உலர் உணவுகளை கொண்ட பொதிகளே வழங்கப்பட்டன. (ஓ-29)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

# அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

84

"அவளால் எப்படி இதனைத் தாங்க முடிகிறது? அவள் ரெலிபோன் இயக்குநராகப் பணிபுரிகிறாள். சம்பளம் போதாது தான். ஆயினும் தனது துன்பம் பற்றி ஒருநாளும் முறையிடமாட்டாள். அவளுக்கென்று குழந்தைகள் இல்லாத படியால் மற்றவர்களைப் பேணி வளர்க்கிறாள்" வெறுமையான வீதியில் ஔமா காரை ஓட்டிக்கொண்டே கூறினாள் .

"நீ சராவைப் பார்க்க போகத்தான் வேண்டும். ஆனால் நான் உன்னோடு வரமாட்டேன்" என்றாள் "ஏன் அப்படி?" என்றார் ஒபாமா.

"எல்லாம் அந்தக் கிழவனின் சொத்துத் தான் காரணம். அப்பாவின் சொத்தில் தனக்கும் பங்கு வேணும் என்று சண்டை போட்டாள் சரா. றோயும் நானும் பெர்ணாட்டும் உண்மையில் கிழவனின் குழந்தைகள் இல்லையென்று அவள் எல்லோருக்கும் சொல்லித் திரிகிறாள்" என்று கூறியவள் நீண்ட பெருமூச்சு விட்டுத் தொடர்ந்தாள்.

"எனக்குத் தெரியாது. ஆனால் என்னில் ஒரு பகுதி என்னவோ அவளுக்காக இரங்குகிறது. அவள் துன்பமான வாழ்வைத்தான் கண்டாள். கிழவருக்கு கிடைத்த வாய்ப்பு ஏதும் அவளுக்குக் கிடைக்கவில்லை. படிக்க வேண்டும் வெளிநாடுகளுக்குப் போகவேண்டும் என்று ஆசைப்பட்டாள். அது ஒன்றும் கைகூடவில்லை. இவையெல்லாம் சேர்ந்து அவளிடம் கசப்புணர்வுகளை வளர்த்துவிட்டன.

அவளுடைய வாழ்வு சீரழிந்ததற்கு நானும் எனது தாயும் தான் காரணம் என்று நினைக் கிறாள்.

"சரி. கிழவரின் சொத்துக்கள் என்ன பெறும்?"

"அவ்வளவு பெரிதாக ஒன்றுமில்லை. அவருடைய அரசாங்க ஓய்வூதியம் மட்டும் தான் அதுவும் சிறிய தொகை. அதைவிட ஒன்றுக்கும் உதவாத நிலம் ஒன்றுண்டு. நான் இவற்றில் பங்குகொள்ளாமல் ஒதுங்கிவிட்டேன். இருந்த கொஞ்சமும் லோயர்ஸ்க்குத் தாரை வார்த்துவிட்டார்கள்.



கிழவரிடமிருந்து ஒவ்வொருவரும் நிறைய எதிர்பார்த்தனர். இல்லாதபோது தன்னிடம் இருப்பது போன்ற ஒரு மாயையை அவர் உருவாக்கியிருந்தார்.

ஆகவே இவர்கள் ஆளுக்கு ஆள் சண்டை போட்டுக்கொண்டு காலத்தை வீணடிக்கிறார்கள். கிழவர் இடுகாட்டிலிருந்து கிளம்பி வந்து காப்பாற்றுவார் என்று எண்ணுகிறார்கள்.

பேர்ணாட்டும் காத்துக் கொண்டிருக்கப் பழகிக் கொண்டான். நான் அவனுக்குத் தொழிற் கல்வி கொடுக்கலாமென்று முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். ஆனால் அவன் ஒத்துழைப்பதாகவில்லை.

"அவனுக்கு ஒருவேளை என்னால் உதவ முடியும் என்று எண்ணுகிறேன்" என்றார் ஒபாமா.

"ஆம்,அவனிடம் பேசிப் பார்.நீ இப்போது இங்கிருப்பது நல்லது. நீயும் எங்கள் பரம்பரைச் சொத்தின் ஒரு பகுதி தானே. சரா உன்னைக் காணத் துடிப்பதற்கும் அதுவும் ஒரு காரணம்.

நீ எல்லாம் நிறைந்தவன். ஆகையினால் நான் உன்னைத் தன்னிடமிருந்து மறைத்து வைத்து இருக்கிறேன் என்று வேறு எண்ணுகிறாள். நான் உண்மையில் களைத்துப் போனேன். போதும் போதும் என்றா கிவிட்டது.

நான் ஜேர்மனியில் படிக்கும் போது கென்யாவுக்கு எப்போது திரும்புவது என்று துடித்துக் கொண்டிருந்தேன். இங்கே எப்போ தும் நான் தனித்தவளாக நினைத்ததில்லை. இங்கே எனது குடும்பம் எல்லாப் பக்கத்திலும் இருக்கிறது. தங்கள் பெற்றோர்களை வயோதிபர் இல்லங்களுக்கு யாரும் அனுப்புவதில்லை.

இப்போது எல்லோரும் என்னிடம் உதவிக்கு வருகிறார்கள். அவர்கள் தரும் தொல்லையால் நான் மூழ்கிவிடுவேன் போலிருக்கிறது. உண்மையில் என்னில் குற்றவுணர்வு தலை தூக்குகிறது.

ஏன் தான் நான் பல்கலைக்கழகம் சென்று படித்தேன்? ஏன் நான் மற்றவர்களிலும் பார்க்க அதிர்ஷ்டசாலியாகிவிட்டேன்? படித்த படியால் எனக்கு வேலை வாய்ப்பு அதிகம் இருக்கிறது. மற்றவர்கள் உண்மையில்

### ஜம்பொன்

பாவம். நான் ஒருத்தியாகத் தனித்து நின்று என்ன செய்ய முடியும்? எப்படி எல்லோருக்கும் உதவமுடியும்?

எனக்கு ஒரு கனவுண்டு. அப்பாவின் நிலத்தில் ஒரு பெரிய வீடுகட்டவேண்டும். அதில் எல்லோரையும் ஒரு கூரைக்குள் வைத்துப் பராமரிக்க வேண்டும். குழந்தைகள் நமது பாரம்பரியத்தைப் பேணி உதவ வேண்டும். லூலோ மொழியில் பேசி மகிழ வேண்டும். வீடு எல்லோருக்கும் சொந்தமாக வேண்டும். ஆனால்... நடக்குமா?

(தொடரும்)

# 30 விநாடிகளில் 4 தேங்காய்களை விரலால் உரித்து மலேசியர் சாதனை

30.81 விநாடிகளில் 4 தேங்காய்களை தனது சுட்டு விரலால் உரித்து மலேசியகுங்பூ பயிற்றுவிப்பாளர் ஒருவர் சாதனை படைத்துள்ளார்.



கோலாலம்பூரைச் சேர்ந்த ஹோகிங் ஹுய் என்ற இந்த குங்பூ பயிற்று விப்பாளரின் சாதனை மலேசிய சாதனைப் பதிவுகளில் இடம் பிடித்துள்ளது.

ஒரு தேங்காய்க்கு 7 விநாடிகள் என்ற வீதத்தில் தேங்காய்களை படு வேகமாக உரித்த ஹோகிங் ஹுய் விப ரிக்கையில்,

இது வெறும் மந்திரம், மாயம் மூலம் நடை பெற வில்லை. சாதனை செய்ய வேண்டும் என்பதற்காக சீனத் தற்பாதுகாப்புக் கலை நுட்பத்தைப் பயன்படுத்தி எனது கை விரல்களுக்கு கடும் பயிற்சியளித்தேன். இந்த சாதனை மூலம் எனது கனவு நிறைவேறியுள் ளது. கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெறும் வரை எனது முயற்சி தொடரும் என்று கூறினார். (ஓ-6)

# குறைந்தளவு நீரில் துணி துவைக்க நவீன சலவை இயந்திரம் கண்டுபிடிப்பு

ஒரு வாளி துணியை துவைக்க குடம் குடமாய் தண்ணீர் செலவு செய்ய வேண்டும். இனி இந்த கவலை உங்களுக்கு இருக்காது. ஒரு கோப்பை தண்ணீரால் ஒரு வாளி துணி களை துவைக்கக் கூடிய நவீன சலவை இயந் திரம் லண்டனில் கண்டுபிடித்துள் ளனர்.

லண்டன் லீட்ஸ் பல்கலைக் கழகத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் இதை உருவாககி உள்ளனர்.

சலவை இயந்திரத்தில் துணியை வைத்து ஒரு கோப்பை தண்ணீரை ஊற்றி யதுமே அந்த தண்ணீரையே சுத்தப்படுத்தி மறுபடி மறுபடியும் பயன்படுத்தி துணியை முழுமையாக துவைத்து விடும். சலவைத் தூளும் குறைந்தளவே தேவைப்படும்.

தற்போது சலவை இயந்திரத்துக்கு பயன்படுத்தும் தண்ணீரை விட 90 சதவீதம் குறைவான தண்ணீரே போதுமானது என்று இதைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகள் கூறி னார்கள்.

அதேபோல வழக்கமான சலவை இயந் திரத்துக்கு பயன்படுத்தும் மின் சாரத்தை விட 30 சதவீதம் குறைவான மின் சாரமே இதற் குத்தேவைப்படும். இந்த சலவை இயந்திரம் அடுத்த ஆணடு விற்பனைக்கு வரும் என் றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-6)




# தமிழ் படங்களைப் பார்த்து சீரழியும் மலேசிய இளைஞர்கள்

(கோலாலம்பூர்)

மலேசிய இளைஞர்கள் பலர் தமிழ்ச் சினி மாவில் வரும் காட்சிகளை பார்த்து பல்வேறு குற்றங்களில் ஈடுபடுவது அதிகரித்துள்ளது. மலேசியாவில் 27 இலட்சம் இந்தியர்கள் உள் ளனர். இவர்களில் பெரும்பாலானோர் தமி ழர்கள். இதன் காரணமாக மலேசியாவில் தமிழ்த் திரைப் படங்கள் அதிகமாக திரையிடப் படுகின்றன. இதே போல எல்லா தமிழ் அலை வரிசைகளையும் அங்குள்ள தமிழர்கள் பார்க் கின்றனர்.

பள்ளிப் படிப்பை பாதியில் விட்டு சுற்றித் திரி யும் இளைஞர்கள் பலர் தமிழ்ப் படங்களில் வரும் ரௌடி பாத்திரங்களை பார்த்து அதே போன்ற நடவடிக்கையில் ஈடுபடுவதாக மலே சிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். பள்ளிப் படிப்பை பாதியில் விட்டு ஊரை சுற்றும் இளை ஞர்களை தீவிரமாக கண்காணிக்கும் படி உள்ளூர் பிரமுகர்களுக்கும் சேவை அமைப் புக்களுக்கும் பொலிஸார் கோரிக்கை விடுத் துள்ளனர். கோலாலம்பூரின் புற நகரில் உள்ள பிரிக்பீல்டு என்ற இடத்தில் தான் ஊரை சுற் றும் தமிழ் இளைஞர்கள் அதிக அளவில் உள் ளதாக கூறப்படுகிறது. இவர்கள் தலையை மொட்டை அடித்துக்கொண்டு எங்காவது திரு டிய அல்லது கொள்ளையடித்த பணத்தில் பெரிய தங்க சங்கிலியை கழுத்தில் அணிந்து கொண்டு கறுப்பு ஜீன்ஸ் மற்றும் ரிசேட்டுடன் தாதா போல் வலம் வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இவர்களை நல்வழிப் படுத்த ஊர் பெரியவர்கள் இவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். அல்லது தமிழ்ப் படங்களுக்கு தடை விதிக்க வேண்டும் என ஒரு தரப்பினர் கருத்து தெரிவித்துள்ளனர். (ஓ-6)

சீனாவைத் தாக் கிய லின்பா புயலால் குறைந்தது ஒருவர் பலியானதுடன், 6 பேர் காணாமல் போயுள் ளனர். குவாங்டொங் மாகாணத்திலுள்ள மெய்டோங் கிராமத் தில் புயலுடன் பெய்த அடை மழை காரண மாக வெள்ளப்பெருக் கில் மூழ்கியுள்ள பிரதேசத்தில் படை யினர் மீட்புப் பணியில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.



# மரண அறிவித்தல்

## திருமதி நடராசா தனலட்சுமி



கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட நடராசா தனலட்சுமி நேற்று (24.06.2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ் சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், சந்திரபோஸ் (ஜேர்மன்), ஜீவா, ஜிக்கி நிமல் (ஜேர்மன்), தயாநிதி (ஜேர்மன்), யோககீதா ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பமாலா (ஜேர்மன்), தர்மலிங்கம், காலஞ்சென்ற கணேஷ் (ஜேர்மன்) மற்றும் ஆனந்தன் (ஜேர்மன்), சுகுமார் ஆகியோரின்அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி இராசலட்சுமி மற்றும் சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கபில்ராஜ், தர்சிகா, கீர்த்திகா, சுபத்திகாதடினேஷ், அனுஷா, கமல்ராஜ், கஜனா, சௌமியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.06.2009) வியாழக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அன்னா ரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டப்பிராய்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்
குடும்பத்தினர்.

077-3013062
S.A. Chandrabavan
(Publisher & Teacher)

# புலமைப் புலரி பப்ளிகேஷன் -கொழும்பு

மாணவர்களைபாடசாலைக்குத்தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமான
புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் தரம் 05 மாணவர்களுக்கு வழங்கப்படும்

# மாதிரிப் பரீட்சை -2009

நேரம் :-1மணி 15 நிமிடம்
வினாப்பத்திரம் (2)
பெற்ற புள்ளி ( )

பரீட்சை இலக்கம் 06

எஸ்.ஏ.சந்திரபவன்

01.கீழுள்ள பாடலை வாசித்து அது தொடர்பாக கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

தோட்டக் காய்கள் கடித்து வீசி
தொலைத்து நாசம் புரியும்
ஆட்டம் ஆடி அலுப்புத் தீர
அமர்ந்து தேகம் சொறியும்

ஓட்டக் கோலை எடுக்கும் போது
புருவம் உயர்த்திப் பார்க்கும்
காட்டுக் கூச்சல் எழும்பித் தாவிக்
கணத்தில் ஓடி மறையும்

1.தேகத்தை சொறியும் குணம் கொண்ட மேலே கூறப்பட்ட பிராணி எதுவாக இருக்கும்?
(----------------------------------------)

2. 'தேகம்' என்பதன் ஒத்த கருத்துள்ள சொல் ஒன்று எழுதுக.
(----------------------------------------)

3.'காய்கள்' என்பதன் எதிர்க்கருத்துச் சொல் ஒன்று எழுதுக.
(----------------------------------------)

4.மேலுள்ள பாடல்களில் பயனிலைச் சொல்லாக வந்துள்ள ஏதாவது ஒரு வினைச் சொல்லை எழுதுக.
(----------------------------------------)

5. புருவம் என்னும் சொல்லை பன்மையாக எழுதுங்கள்.
(----------------------------------------)

6. கூச்சல என்னும் சொல்லின் கருத்து யாது?
(----------------------------------------)

7.தோட்டக் காய்கள என்பதைப் பிரித்தெழுதுக.
(--------------------+--------------------)

8. கணத்தில் + ஓடி என்பதைச் சேர்த்தெழுதுக.
(----------------------------------------)

9.அப்பிராணி காய்களைக் கடித்து வீசி 'நாசம்' புரிகிறதாம். 'நாசம் புரிதல்' என்பது யாது?
(----------------------------------------)

10. காய்கள் , தேகம் , புருவம் , தோட்டம்

இவை எந்த வகைச் சொற்கள் ஆகும்?
(----------------------------------------)

(10புள்ளிகள்)

02) கீழ்வரும் வினாக்களின் விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

தங்கை நடனம் ஆடினாள்

1.இவ்வாக்கியத்திலுள்ள எழுவாய்ச் சொல் எது?
(----------------------------------------)

2.கிளி பழத்தைக் கோதியது.

இவ்வாக்கியத்தில் செயற்படுபொருளாக வந்துள்ள சொல் எது?
(----------------------------------------)


3.தீபன் ஓடும்போது நாய் அவனைத் துரத்தியது இவ்வாக்கியத்தில் வந்துள்ள அ∴. றினைச் சொல் எது?
(----------------------------------------)

4.வகுப்பில் ஆசிரியர் கற்பித்தார் மாணவர்கள் ஆவலுடன் படித்தனர் மேலுள்ள வாக்கியத்தில் உள்ள 'பலர்பால்'சொல் ஒன்று எழுதுக.
(----------------------------------------)

5.சிறு உளிகள் செதுக்குவதே சிற்பம் ஆகும். இவ்வாக்கியத்தில் வந்துள்ள பன்மைச் சொல் எது?
(----------------------------------------)

(5புள்ளிகள்)

❖ கீழே வள்ளுவர் வீதி, வவுனியாவில் வசிக்கும் வாகீசன் எனும் மாணவன் தனது பிறந்தநாளுக்கு அழைப்பு விடுத்து தனது நண்பன் நவனீதனுக்கு எழுதிய கடிதத்தின் அமைப்பு முறை கீழே காட்டப்பட்டுள்ளது.




03.மேலுள்ள (1),(2),(3),(4) ஆகிய பகுதிகளை அவதானித்து அவற்றில் வரவேண்டிய விடயங்கள் எவையென அறிந்து சரியான விடையின் கீழ் கோடிடுக.

1.இப்படிக்கு வாகீசன் என்னும் விடயம் வரவேண்டிய இலககப்பகுதி எது?

1.இலக்கம் -1 2. இலக்கம்- 2 3. இலக்கம் -3 4. இலக்கம்-4

2.வள்ளுவர் வீதி, வவுனியா என்னும் விடயம் வரவேண்டிய இலக்கப்பகுதி எது?
1.இலக்கம் -1 2. இலக்கம்- 2 3. இலக்கம் -3 4. இலக்கம்-4

3.அன்புள்ள நவனீதன். என்னும் விடயம் வரவேண்டிய இலக்கப்பகுதி எது?

1.இலக்கம் -1 2. இலக்கம்- 2 3. இலக்கம் -3 4. இலக்கம்-4

4.தனது பிறந்த நாள் எப்போது என்றும் ,அதற்கு வருமாறும் கேட்டு எழுதிய விடயங்கள் யாவும் அடங்கவேண்டிய இலக்கப்பகுதி எதுவாக இருக்கும்?

1.இலக்கம் -1 2. இலக்கம்- 2 3. இலக்கம் -3 4. இலக்கம்-4

5.வாசீகன் கடிதம் எழுதிய நாளன்றைய திகதியை எழுத மறந்துவிட்டான் அதனை நீங்கள் எப்பகுதியில் எழுதுவீர்கள்?

1.இலக்கம் -1இல் 2. இலக்கம்- 2இல்
3. இலக்கம் -3இல் 4. இலக்கம் - 4இல்

(5புள்ளிகள்)

04.கீழே தரப்பட்டுள்ள வினாக்களை நன்றாக வாசித்து, சரியான விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

1. 459 என்னும் எண்ணை சொற்களில் எழுதுக.
(----------------------------------------)

2.எண்ணூற்று எட்டு என்பதை இலக்கத்தில் எழுதுக.
(----------------------------------------)

❖ 0,6 ஆகிய இரு இலக்கங்களை வைத்துக் கொண்டு, எழுதக்கூடிய ஈரிலக்க எண்களில்,

3.மிகப்பெரிய எண் குறி யாது?
(----------------------------------------)

4.மிகச் சிறிய எண் குறி யாது?
(----------------------------------------)

(8புள்ளிகள்)


5. I-1 V-5 X-10 XX-20 XXX-30 XL-40

மேலுள்ள எண்களையும் அவற்றுக்கான உரோம எண்களையும் அவதானித்து , கழ்வரும் எண்களுக்கான உரோமன் எண்களை எழுதுக.

1. 8- (--------------------) 2. 12 - (--------------------)
3. 25-(--------------------) 4. 41- (--------------------)

(4புள்ளிகள்)

6. கீழுள்ள உருக்களின் பெயர்களை எழுதுக.




(3 புள்ளிகள்)

05.கீழ்வரும் பிரசினங்களை வாசித்து விடை எழுதுக.

100சென்ரி மீற்றர் ஒரு லீற்றர் எனின்,

1. 2 kPwh; ePkhd ryhi fapy; 50cm துண்டங்கள் எத்தனை வெட்டலாம்?
(----------------------------------------)

2. 2m 30 cm நீளமான சலாகைகள் மூன்றினது மொத்த நீளம் யாது?
(----------------------------------------)

1000மில்லி லீற்றர் ஒரு லீற்றர் எனின்,

3. ஒரு லீற்றர் பாலிலிருந்து 250ml பால்பைக்கற்றுக்கள் எத்தனை செய்ய லாம்?
(----------------------------------------)

4. 650ml பாலிலிருந்து 250ml பால் அருந்தப்பட்டால் மிகுதியாக உள்ள பாலின் அளவு யாது?

(----------------------------------)

(8 புள்ளிகள்)

06. கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1.தனது உடலுக்குத் தானே நீரை எடுத்து ஊற்றி நீராடக்கூடிய பிராணி எது?

1.காகம் 2. எருமை 3. யானை

2.இலங்கையில் தேசிய விலங்குகள் காட்சிச்சாலை அமைந்துள்ள இடம் எது?

1.பின்னவல 2.தெஹிவளை 3. வில்பத்து

3.முளைக்கும் திறன் கொண்டவித்து ஒன்றின் இயல்பு எது?

1.திரட்சியாய் இருத்தல் 2.நீரில் மிதத்தல் 3.துவாரம் காணப்படல்

4.கலைத்திறன் தேவைக்குப் பயன்படுத்தக்கூடிய வித்து வகையில் அடங்குவது எது?

1.பலாவித்து 2.ஆலம் வித்து 3.பனம் வித்து

5.பழத்திற்குள்ளே வித்து அமைந்திருக்காமல் வெளியே ஒட்டிக் கொண்டிருக்கும் பழம் எது?

1.மரமுந்தி 2.அன்னாசி 3.திராட்சை

6.மஞ்சள் நிற முட்டை இடும் பிராணி எது?

1.கோழி 2.நத்தை 3.பாம்பு

7.விசர்நாய்க்கடியினால் ஏற்படக்கூடிய நோய் எது?

1.பக்கவாதம் 2.அம்மைநோய் 3.நீர்வெறுப்பு நோய்

8.நோய்காவியாகச் செயற்படும் பிராணி எது?

1.நுளம்பு 2.வண்ணாத்துப்பூச்சி 3.எறும்பு

9.நீரில் வாழும் முலையூட்டிப் பிராணி எது?

1.சுறா 2.திமிங்கலம் 3.கடற்குதிரை


10.ஆண்கோழியைக் குறிக்கும் ஆண்பாற் சொல் எது?

1.சேவல் 2.பெடை 3.பேடு

(10 புள்ளிகள்)

07) கீழே தரப்பட்டுள்ள வித்துக்களை இனம்கண்டு அவற்றின் பெயர்களைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

எருக்கலை
அச்சி
வேங்கை



1.------------------------2.----------------------------3.--------------------

(3 புள்ளிகள்)

08)கீழுள்ள தாவரப் பகுதிகளை இனங் கண்டு, அவை எந்தத் தாவரங் களுக்குரியவை என அவற்றின் பெயர்களைப் புள்ளிக் கோட்டில் A,B,C என எழுதுக.

A -இஞ்சி
B-உருளைக்கிழங்கு
C-சேம்பு





(3 புள்ளிகள்)

09.கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களுக்கான தமிழ்க் கருத்துக்களை எழுதுக.

1.I am Mala-----------------------------------

2.My Name is Kamal ---------------------------------

3.It is a dog-------------------------------------------------------

10. கீழுள்ள தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலச் சொற்களை எழுதுக.

1.கண்டி------------------------------------------------------

2.நகரம் ----------------------------------------

3.வெளிச்சவீடு ------------------------------------

(3 புள்ளிகள்)

11.கீழே தரப்பட்டுள்ள சிங்கள மொழிச் சொற்களை வாசித்து, அவற்றுக்கான தமிழ் மொழிச் சொல்லை எழுதுக


i මේසය .........................

ii) පොත .........................


iii) පැන්සිල ....

(3 புள்ளிகள்)

12.பின்வரும் விஞ்ஞானச் செயற்பாட்டிற்கான உபகரணங்களை இனங்கண்டு அவற்றின் பெயர்களை அந்தந்த உபகரணங்களின் கீழ் எழுதுக



1. ----------------------------------------



2. ----------------------------------------



3. ----------------------------------------

(6 புள்ளிகள்)

13. பின்வரும் வினாக்களுக்கான சரியான விடைகளை கீழே கூட்டிலுள்ள சொற்களிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

அகிம்சை / மகாத்மா/ சுதந்திரம் / சுயசரிதை /சத்தியாக்கிரகம்

1.ஒருவர் தன்னை பற்றி தானே எழுதும் நூல் எவ்வாறு அழைக்கப்படும்?

----------------------------------------

2.ஆயுதம் ஏந்தாது,இரத்தம் சிந்தாது செய்யப்படும் போராட்டம் எப்பெயரால் அழைக்கப்படும்?

----------------------------------------

3.ஆங்கிலேயர் எமது நாட்டை விட்டு வெளியேறியபோது நாட்டுக்கு கிடைத்த நிம்மதியான நிலைமை எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

----------------------------------------

4.காந்தியடிகளின் தியாக வாழ்வின் மூலம் அவரின் பெயருடன் சேர்ந்து கொண்ட பட்டம் எது?

----------------------------------------

5. அமைதியான சாத்வீகப் போராட்டங்களில் ஒன்றாக எதனைக் கொள்ள முடியும்?

----------------------------------------

(5புள்ளிகள்)

14. எனது பெயர் மீன்' ஆகும் .நான் ஓர் அழகிய பிராணியாவேன்...........!

- மேலே தரப்பட்டுள்ள மீன் தொடர்பான வசனங்களைப் பொருத்தமான முறையில் தொடர்ந்து எழுதுக.
- குறைந்தது 4 சொற்களைக் கொண்ட 6 வசனங்கள் எழுதுக.
- மீன் தன்னை பற்றித் தானே கூறுவதாக அமைதல் வேண்டும்.

1.----------------------------------------

2.----------------------------------------

3.----------------------------------------

4.----------------------------------------

5.----------------------------------------

## வினாத்தாள் 01 இன் விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. 2 | 2. 3 | 3. 3 | 4.4 | 5.3 | 6.3 | 7.2 | 8.1 | 9.3 | 10.2 |
| 11.1 | 12.2 | 13.1 | 14.2 | 15.3 | 16.1 | 17.1 | 18.2 | 19.2 | 20.2 |
| 21.1 | 22.3 | 23.1 | 24.1 | 25.2 | 26.3 | 27.2 | 28.1 | 29.2 | 30.4 |
| 31.3 | 32.3 | 33.3 | 34.2 | 35.23மாதங்கள் | 36.டிசம்பர் | 37.4 | 38.9 | 39.15 நிமிடங்கள் | 40.வாசுவின் |

# இடம்பெயர்ந்த மக்களின் மனிதாபிமான தேவைகளை பூர்த்தி செய்ய 804 மில்லியன் ரூபா நிதி உதவி

## ஐரோப்பிய ஆணைக்குழு வழங்குகின்றது

(கொழும்பு)

ஐரோப்பிய ஆணைக்குழு 804 மில்லியன் ரூபாவை இலங்கைக்கு உதவியாக வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உள்ளக ரீதியாக இடம்பெயர்ந்துள்ள மக்களின் மனிதாபிமான தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் இந்த நிதி உதவி வழங்கப்படுவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் நிலையம் ஊடாகவே இந்த நிதியை பயன்படுத்தி செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்ந்துள்ள மக்களின் நலன்புரி விடயங்கள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் அதிக ஆர்வம் கொண்டுள்ளதாக ஒன்றியத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் உதவிகளை சிறப்பான முறையில் மேற்கொள்ள சர்வதேச உதவி நிறுவனங்கள் நலன்புரி நிலையங்களுக்குச் செல்ல முறையான அனுமதி கிடைக்க வேண்டும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (ஓ-6)

# ஐக்கிய அரபு இராச்சியத்தில் பணியாற்றும் இலங்கையரை பதிவு செய்யக் கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய அரபு இராச்சியத்தில் உள்ள சகல இலங்கைப் பிரஜைகளும் பதிவு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அபுதாபி மற்றும் துபாய் ஆகிய நாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்கள் இணைந்து இந்தப் பதிவு செய்யும் பணிகளை மேற்கொண்டுள்ளன.

ஜுலை முதலாம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை பிரதி வெள்ளிக்கிழமை தோறும் முற்பகல் 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை இந்த பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் பணியாற்றி வரும் இலங்கையர்கள் அனைவரும் தமது முழுப்பெயர், கடவுச்சீட்டு இலக்கம், முகவரி, தொலைபேசி இலக்கம், தொழில் விபரங்கள், ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு சென்ற தினம் ஆகிய தகவல்களை மின்னஞ்சல் அல்லது தொலைநகல் ஆகியவற்றின் மூலம் தூதரகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளனர். (ஓ-6)

# ஜீவனாம்சம் கோரி வழக்கு தொடர்ந்த 80 வயது மூதாட்டி

(சென்னை)

சென்னை சாந்தோமைச் சேர்ந்த சுசிலா (80) என்பவர் மாதம் ரூ. 10 ஆயிரம் ஜீவனாம்சம் கேட்டு குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

சென்னை சாந்தோம் ரோசரி தேவாலய வீதியைச் சேர்ந்தவர் சுசீலா. இவரது கணவன் கிருஷ்ணன் (85). இருவருக்கும் கடந்த 1945 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது.

இவர்களுக்கு இரண்டு மகன்களும், இரு மகள்களும் உள்ளனர். கடைசி மகன் தனது பெற்றோருடன் தங்கியுள்ளார்.

கிருஷ்ணனுக்கும் சுசீலாவுக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதையடுத்து சுசீலாவை அடித்ததாகவும், வீட்டை விட்டு வெளியேற்ற முயற்சி செய்ததாகவும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக மயிலாப்பூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சுசீலா புகார் செய்தார். சுசீலா மற்றும் கிருஷ்ணனை பொலிஸார் நேரில் அழைத்து சமாதானப் படுத்தியுள்ளனர். இதையடுத்து வீட்டின் கீழ் மாடியில் சுசீலாவும் மேல் மாடியில் கிருஷ்ணனும் இருப்பதென முடிவு செய்யப்பட்டது.

சுசீலாவின் மாதச் செலவுக்கு ரூ.2 ஆயிரம் பணம் அளிப்பதாகவும் கிருஷ்ணன் உறுதி அளித்தார். இந்த நிலையில் சுசீலா குடும்ப நல நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

கணவருக்கு மாதம் ரூ. 25 ஆயிரம் கிடைப்பதாகவும் இதிலிருந்து மாதம் ரூ. 10 ஆயிரம் ஜீவனாம்சம் வழங்க உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கோரப்பட்டுள்ளது. (ஓ-6)

# வணங்காமண் கப்பலை வெளியேற்றும் நடவடிக்கைக்கு திருமாவளவன் கண்டனம்



(சென்னை)

ஈழத்தமிழர்களுக்கு ஐரோப்பாவில் இருந்து அனுப்பப்பட்ட வணங்காமண் கப்பலை சென்னை துறைமுகத்தில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கைக்கு திருமாவளவன் எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி. வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

வன்னிப் பகுதியில் இடம்பெயர்ந்துள்ள தமிழர்களுக்கு என ஐரோப்பிய வாழ் தமிழர்கள் கடந்த மே மாதம் சுமார்884 டன் எடையுள்ள உணவு மற்றும் மருந்து பொருட்களை கப்டன் அலி என்னும் வணங்காமண் கப்பல் மூலம் அனுப்பி வைத்தனர்.

இலங்கை அரசு அதனை அனுமதிக்கவில்லை. சுமார் 2 மாதங்களாக அந்த கப்பல் அதுவும் ஓர் அகதியை போல, நடுக்கடலில் தத்தளித்து தவிக்கிறது. அந்த கப்பலில் பணியாற்றும் ஊழியர்கள் நோய்வாய்ப்பட்டு சிகிச்சைக்கு வழியின்றி தவிக்கின்றனர்.

சென்னை துறைமுகத்தில் அப்பொருட்களை இறக்குவதற்கு இந்திய அரசும் அனுமதி அளிக்கவில்லை என்பது இந்திய அரசின் ஈரம் இல்லாத தன்மையை வெளிப்படுத்துகிறது. அப்பொருட்களை தமிழ்நாட்டில் உள்ள அகதிகளுக்கு வழங்குவதற்கு அனுமதி அளிக்க வேண்டும் எனவும், அதனை விடுதலை சிறுத்தைகளிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் பெரும் முயற்சிகளை மேற் கொண்டோம்.

ஆனால் அதிகாரிகள் அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை என்பதுடன் அக்கப்பலை வெளியேறும்படி எச்சரித்துள்ளனர். "இந்தியாவை விட இலங்கை அரசு மேல்" என்று 'கூறும் அளவிற்கு இந்திய அரசின் போக்கு கொடூரமாக உள்ளது இவ்வாறு தொல். திருமாவளவன் எம்.பி.கூறியுள்ளார். (ஓ-6)

# ஈரானிய ஜனாதிபதிக்கு எதிரான போராட்டங்களில் கலந்துகொண்ட இரு இலங்கையர்கள் கைது

(கொழும்பு)

ஜனாதிபதி முஹமட் அஹமட் நிஜாத்துக்கு எதிராக அந்நாட்டு எதிர்க்கட்சிகள் ஏற்பாடு செய்திருந்த பாரிய போராட்டங்களில் கலந்து கொண்ட இரண்டு இலங்கையர்களை அந்நாட்டு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த இரண்டு இலங்கையர்களும் போராட்டங்களில் கலந்து கொள்ளவில்லை எனவும், போராட்டங்கள் நடைபெற்ற பிரதேசத்தில் அவர்களது வீடுகள் அமைந்திருந்த காரணத்தினால் இவர்களை அந்நாட்டு பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் ஈரானுக்கான இலங்கைத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட இலங்கையர்களை விடுவிக்கத் தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# மாவோயிஸ்டுகளுடன் பேச்சுவார்த்தை கிடையாது ; இந்தியா திட்டவட்டமாகத் தெரிவிப்பு

(புதுடில்லி)

மாவோயிஸ்டுகளுடன் பேச்சுவார்த்தை கிடையாது என இந்திய மத்திய அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. மேற்குவங்க மாநிலம் மித்னாப்பூர் மாவட்டத்தில் உள்ள லால்கர் பகுதியை கைப்பற்றிய மாவோயிஸ்டுகள் அங்கு பொலிஸாரும் பாதுகாப்பு படையினரும் நடத்திய கூட்டுத் தாக்குதலை சமாளிக்க முடியாமல் தற்போது பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் மாவோயிஸ்டு மூத்த தலைவர் சாகர் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கு வங்க அரசுடனும், மத்திய அரசு அதிகாரிகளுடனும் தாங்கள் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

எனினும் இதற்கு பதிலளித்துள்ள மத்திய அரசு, மாவோயிஸ்டுகள் லால்கர் பகுதியில் முகாமிட்டிருக்கும் பாதுகாப்பு படையினரிடம் சரணடைய வேண்டும். அவ்வாறு சரணடைந்தால் மட்டுமே பேச்சுவார்த்தைக்கு இடமுண்டு என நிபந்தனை விதித்துள்ளது. மேலும் பகையை முடிவுக்கு கொண்டு வர சரணடைதல் மட்டுமே வழி என வலியுறுத்தியுள்ளது. (ஓ-6)

# ஜம்முவில் பஸ் விபத்து 12 பேர் பலி

ஜம்முவில் பஸ் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் 12 பேர் பலியாகியுள்ளனர். ஜம்மு கத்ரா நெடுஞ்சாலையில் பஸ் வந்து கொண்டிருந்த போது பஸ் டிரைவர் கட்டுப்பாட்டில் இருந்து விலகி பள்ளத்தில் விழுந்தது. இதில் 12 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்துள்ளனர். மீட்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. (ஓ-6)

# இந்திய கடலோரக் காவல் படையினரால் இலங்கை மீனவர்கள் 10 பேர் கைது

(சென்னை)

இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்த இலங்கை மீனவர்கள் 10 பேரை கடலோரக் காவல்படையினர் கைது செய்துள்ளனர்.

இரு தினங்களிற்கு முன்னர் காவல் படையினர் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோதே ஆந்திர மாநிலம் கிருஷ்ணாம்பட்டினத்திலிருந்து 150 மைல் தூரத்தில் இரண்டு இலங்கை விசைப் படகுகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மேற்படி மீனவர்களை கைது செய்துள்ளனர்.

இவர்கள் கடந்த திங்கட்கிழமை சென்னை காசிமேடு மீன்பிடித் துறைமுகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு மாநகரப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ஓ-6)

# தமிழக மீனவர்களுக்கு ஒரு வார காலக்கெடு கடல் எல்லையை மீறினால் கடும் நடவடிக்கை

## இலங்கை கடற்படை அதிகாரிகள் எச்சரிக்கை

(இராமேஸ்வரம்)

இலங்கை கடல் பகுதிக்குள் நுழையும் தமிழக மீனவர்கள் கடும் விளைவுகளை சந்திக்க வேண்டும் என இலங்கை கடற்படை அதிகாரிகள் இராமேஸ்வரம் மீனவர்களுக்கு கெடு விதித்துள்ளனர்.

இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்க சென்ற தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் படகுடன் கடத்திச் சென்று தலை மன்னார் முகாமில் எட்டு மணி நேரம் சிறை வைத்தனர். அங்கு வந்த கடற்படை அதிகாரிகள் மீனவர்களிடம் தமிழில் பேசி விசாரித்தனர்.

அப்போது அவர்கள், இலங்கையில் தற்போது புலிகள் பிரச்சினை முடிவுக்கு வந்த நிலையில் 24 மணி நேரமும் இலங்கை மீனவர்கள் கடலுக்குச் செல்ல அரசு அனுமதி அளித்துள்ளது. இதனால் இலங்கை கடல் பகுதிக்குள் மீன்பிடிக்கையில், இந்தியா - இலங்கை இருநாட்டு மீனவர்களுக்குள் பிரச்சினை ஏற்படும்.

இதை கருத்தில் கொண்டு இனி ஒரு வாரம் வரை தமிழக மீனவர்களை பிடித்து இது போல் விசாரித்து எச்சரித்து அனுப்புவோம். அதன்பின் இலங்கை கடல் பகுதிக்குள் நுழையும் தமிழக மீனவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்போம் எனத் தெரிவித்துள்ளனர்

இதுகுறித்து இராமேஸ்வரம் மீனவர்கள் கூறுகையில்,

இலங்கை கடற்படையின் இந்த எச்சரிக்கை இருநாட்டு மீனவர்களுக்குள் நிலவும் ஒற்றுமையை சீர்குலைக்கும் நடவடிக்கையாகத்தான் எடுத்துக்கொள்ள முடியும். இரு நாட்டு கடல் பகுதியில் மீனவர்களுக்குள் எப்போதாவது எழும் பிரச்சினைகளை நிரந்தரமாக்குவதற்கும் தமிழ் இன உணர்வுகளுக்குள் பிரிவினையை தோற்றுவிக்கவும் இலங்கை கடற்படை திட்டமிட்டுள்ளது. இதில் மத்திய அரசு உடனடியாக தலையிட வேண்டும் என்றனர். (ஓ-6)

# ரூ. 2 இலட்சம் செலுத்தி தமிழகம் வந்த அகதிகள்

படகு கட்டணமாக இரண்டு இலட்சம் ரூபாய் கொடுத்து இராமேஸ்வரம் வந்ததாக இலங்கையிலிருந்து வந்த அகதிகள் தெரிவித்துள்ளனர்.

மன்னாரைச் சேர்ந்த அந்தோனியம்மாள், நிரோசன் (வயது 25), நிதர்சன் (வயது 21), மற்றும் அருள்நேசன் (வயது 18) ஆகியோரே இவ்வாறு கடந்த திங்கட்கிழமை தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரையை வந்தடைந்தனர்.

பின்னர் அவர்கள் அங்கிருந்து மாலை ஆறு மணிக்கு தனுஷ்கோடி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்குப்பின்னர் மண்டபம் முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ஓ-6)

# வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்தி விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## வெலிக்கடை சிறைச்சாலை தமிழ் கைதிகள் ஜனாதிபதிக்கு மகஜர்

(கொழும்பு)

வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்தி தம்மை விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் தமது எதிர்காலத்தில் அக்கறை செலுத்துமாறு வேண்டியும் வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மகஜரொன்றை அனுப்பியுள்ளனர்.

ஜனாதிபதியிடம் கையளிப்பதற்காக மேற்படி கைதிகளினால் கொழும்பு நீதிமன்ற நீதிவானிடம் கடந்த திங்கட்கிழமை இந்த மகஜர் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த மகஜரில்,

வெலிக்கடை சிறைச்சாலையின் 120 ஆம் இலக்க வார்ட் பிரிவில் கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக தாம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தம்மில் ஐந்து பிரிவினர்கள் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

இதில் ஒரு பிரிவினர் மேல் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வரும் நிலையில் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டு விசாரணைகள் இழுத்தடிக்கப்பட்டு வருவதால் பாதிக்கப்பட்டவர்கள்.

இரண்டாவது பிரிவினர், தமது கைது குறித்து விசாரணைப் பிரிவினால் சட்ட மா அதிபருக்கு கோவைகள் அனுப்பப்பட்டுள்ள போதும் இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையிலுள்ளவர்கள்.

மூன்றாம் பிரிவினர், கைது செய்யப்பட்டதற்கான எந்தவொரு கோவையும் விசாரணைப் பிரிவினரால் இதுவரை சட்டமா அதிபருக்கு அனுப்பப்படாதோர்.

நான்காவது பிரிவினர் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்படும் போது காரணமின்றி அவர்களது மனைவி, பெற்றோர் மற்றும் உறவினர்களும் தடுத்து வைக்கப்படுவதால் பாதிக்கப்பட்டோர். ஐந்தாவது பிரிவினர், நான்கு வருடங்களுக்கும் மேலாக எந்த விதமான விசாரணை முடிவுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளோர்.

இவ்விதம் ஐந்து பிரிவினரும் பல்வேறு வகையில் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளதாகவும் இதனால் தமது எதிர்காலமும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தமது எதிர்கால நலன்கருதி விரைந்து நடவடிக்கை எடுத்து வழக்குகளை துரிதமாக விசாரித்து விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமென கேட்டுக் கொள்வதாக அம்மகஜரில் தெரிவித்துள்ளனர். (ஓ-6)

# ஐ.நா. படையில் இணைவதற்கு 749 படையினர் ஹெய்ட்டி பயணம்

ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படையில் இணைந்து கொள்வதற்காக முப்படையைச் சேர்ந்த 52 அதிகாரிகள் உட்பட 749 படையினர் நேற்று முன்தினம் காலை ஹெய்ட்டிக்கு பயணமாகியுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

இந்நிலையில் ஐ.நா.வின் அமைதி காக்கும் படையில் இணைத்துக் கொள்வதற்காக இதுவரையில் 10 படையணிகள் சென்றுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில் இராணுவப் பேச்சாளர் மேலும் கூறுகையில்,

ஹெய்ட்டியில் தற்போது காணப்படும் நிலைமை மேலும் தொடருமாயின் அது சர்வதேச வலய நாடுகளுக்கிடையிலான சமாதானத்துக்கு மட்டுமன்றி அந்நாடுகளின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமையக் கூடும் என்று ஐக்கிய நாடுகள் சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அதனால் ஹெய்டியில் நிரந்தர பாதுகாப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமாயின் சமாதானமானதொரு இராணுவ முன்னெடுப்பை மேற்கொள்ள வேண்டும் என்றும் அதற்காக அனைத்து நாடுகளின் இராணுவமும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை வேண்டுகோள் விடுத்திருந்தது.

இந்த வேண்டுகோளின் பிரகாரமே இலங்கையிலிருந்து 10 ஆவது படையணியும் உரிய பயிற்சிகளுடன் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டது. இப்படையணியில் விஜயபா ரெஜிமண்டைச் சேர்ந்த படையினர் உட்பட முப்படையினரும் அடங்குகின்றனர் எனத் தெரிவித்தார். (ஓ-6)

# ஐ.தே.க. அமைப்பாளர் பதவியிலிருந்து ஜோசப் மைக்கல் பெரேரா விலகல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா இதுவரை வகித்து வந்த நீர்கொழும்பு தேர்தல் தொகுதியின் அமைப்பாளர் பதவியில் இருந்து நேற்று முன்தினம் விலகிக் கொண்டார்.

தனது சுயவிருப்பின் பேரிலேயும் அத்துடன் கட்சியை சக்திப்படுத்தும் வகையிலேயுமே தான் இப்பதிவியிருந்து விலகத் தீர்மானித்ததாக கடந்த செவ்வாய்க் கிழமை பாராளுமன்றக் கட்டிடத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்து இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து ஜோசப் மைக்கல் பெரேரா எம்.பி. மேலும் கூறுகையில்

கம்பஹா மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினராகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதம கொறடாவாகவும் நான் செயற்பட்டு வருகின்றேன்.

அதுமட்டுமல்லாது கட்சியில் மேலும் பல பதவிகளிலும் அமர்த்தப்பட்டுள்ளேன். இந்நிலையில் கம்பஹா மாவட்டத்தின் நீர்கொழும்பு தேர்தல் தொகுதியின் அமைப்பாளர் பதவியில் இருந்து விலகுவதற்கு பல காரணங்கள் உள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியை ஒரு வலுவுள்ள கட்சியாக மாற்றியமைக்க வேண்டிய தேவை எமக்கு இருக்கின்றது.

அத்துடன் கட்சியை பாதுகாப்பதற்கென இளைய சமூகம் வரிசையில் நிற்கின்றது.

இந்நிலையில் விட்டுக் கொடுப்புகள் பாரிய முன்னேற்றத்தை அளிக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டதாலேயே அமைப்பாளர் பதவியிலிருந்து விலகுவதற்கு தீர்மானித்து எனது முடிவை கட்சியின் தலைமைக்கு அறிவித்தேன்.

எல்லாப் பதவிகளையும் ஒருவரே ஏற்றிருப்பதை விட அதனை பரவலாக்கம் செய்வதன் மூலம் கட்சியை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல முடியும் எனவும் நம்பிக்கை கொண்டுள்ளேன் எனத் தெரிவித்தார். (ஓ-6)

## தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள வறிய குடும்பங்களுக்கான உதவிகள்

வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்களை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த மந்துவில், கைதடி, மட்டுவில், நுணாவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 5 பயனாளிகளுக்கு தென்மராட்சிப் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் கிணறு அமைத்தல், பசுமாடு வளர்த்தல், மறி ஆடு வளர்த்தல், சேதனப் பசளை தயாரித்தலும் அதனோடு இணைந்த தோட்டச் செய்கைக்காகவும் உதவியளிக்கப்பட்டது. (ஓ-29)



கைதடி கலைவாணி வித்தியாலய "பயிலரங்கு" திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட முறைசாராக் கல்வி இணைப்பாளர் அ.சிவரூபன் உரையாற்றுவதையும், அருகில் கல்லூரி அதிபர் ப.செல்லத்துரை, பிரதம விருந்தினரான அறவழி நிறுவன செயலதிபர் எம்.கே. ஜீவகதாஸ், கௌரவ விருந்தினரான பழைய மாணவர் சங்கத் தலைவர் சீ.சந்திரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

## மூன்றாம் நாள்

### எம் இனத்தை ஆள்பவள் நீ

சுற்றிவரும் சூரியன் நீ
சுயமில்லா சந்திரன் நான்
உற்ற கோயில் தனிலிருந்து
வரமளிக்கும் தெய்வமன்றோ
ஆழ்கடல் கடந்து வந்தோம்
அன்னை நீ பிள்ளை நான்
ஏழ் உலகும் ஆண்டவள் நீ
எம் இனத்தைக் காத்தருள்வாய்

புலவர் செ. பரமநாதன்
மண்டைதீவு.

### தொலைத்தருள் தொல்வினைத் துயர்

அலை ஓங்கும் அன்பர் அணிசேர் அழகுக்
கலைதேங்கும் நயினைக் கவின்பதித் – தலைவி!
நிலைத்தருள் ஆட்சிசெய் நாகபூசணி! அன்னே!
தொலைத்தருள் தொல்வினைத் துயர்.

தா. தேவமதுரம்

### துயர் களைவாய் நாகபூஷணி

ஆணவத்தை அழித்திடுவாய் நாகபூஷணி
ஆறுதலைத் தந்திடுவாய் நாகபூஷணி
இன்னல்களைப் போக்கிடுவாய் நாகபூஷணி
ஈன்றவரைக் காத்திடுவாய் நாகபூஷணி
உன்னடியே நம்பி நின்றோம் நாகபூஷணி
ஊனமுற்று வெம்புகின்றோம் நாகபூஷணி
எங்களை ஏன் வாட்டுகின்றாய் நாகபூஷணி
ஏனோ எமை ஆட்டுகின்றாய் நாகபூஷணி
ஐங்கரன் போல் துயர் களைவாய் நாகபூஷணி
ஒற்றுமையாய் வாழவைப்பாய் நாகபூஷணி
ஓங்கு புகழ் நயினை வாழும் செல்வ நாகபூஷணி

அளவையூர் ஞானசுதன் ரமாஜினி

### அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்

ஆழி சூழ் நயினைப் பதி தனிலமர்ந்து
நல்லருளாட்சி நல்கிடும் – நாயகியே
நாட்டிற் சாந்தி, சமாதானம் – மலர்ந்து
நித்திலமும், தீங்கற்ற நிலை மலர
நின் திருப்பொற்பாதம் பணிந்தோமம்மா!
அம்மா உத்தமியே, நாகபூஷணித்தாயே,
நிந்தன் திருவருளை நல்குமம்மா
எங்கள் துயர்களைத் தீருமம்மா.

கனக. இரத்தினசபாபதி
யாழ். பல்கலைக்கழகம்.

### வாழ வழிகாட்ட வரமருள்வாயம்மா!

கள்ளமில்லா உன் முகம் காணக் கார் கடல் மீது
வள்ளம் தனை நாமேறி வாட்டமுடன் வருகையிலே
மெல்லென நீயும் இதழ் விரித்து
விஞ்சிடும் துயரறுக்க வேண்டுகிறேன்
மடம் கொண்டு அமுதமளிக்கும் அம்பிகையே
மாகடல் மத்தியிலே வீற்றிருந்து
வருமடியாரின் மனக் கிலேசமொழித்து
வாழ வழிகாட்ட வரமருள்வாய் அம்மா!

செல்வநாயகம் ரவிசாந்
குப்பிளான்.

மனிதனின் தீய குணங்களை பித்தளைத் தட்டில் பொறிக்கிறோம். அவர்களின் நற்குணங்களை ஓடும் தண்ணீரில் எழுதுகிறோம்.

– ஷேக்ஸ்பியர்

வலம்புரி

## கொல்வினின் பாதையில் அமைச்சர் திஸ்ஸ விதாரண

இரு மொழி என்றால் ஒரு நாடு. ஒரு மொழி என்றால் இருநாடு என நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகக் கூறியவர் கொல்வின் ஆர்.டி. சில்வா அவர்கள்.

சிங்களத் தனிச் சட்டத்தை நிறைவேற்றும் போது இந்தத் தத்துவத்தை கொல்வின் உரைத்தார்.

யாருமே அதனை ஏற்கவில்லை. இருந்தும் சிங்களத் தலைவர் ஒருவர் இருமொழி என்றால் ஒரு நாடு. ஒரு மொழி என்றால் இரு நாடு எனக் கூறியதில் இருந்து ஒட்டுமொத்த சிங்களவர்களும் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல என்பது நிஜமாகின்றது.

கொல்வின் ஆர்.டி.சில்வா போன்ற காலஞ்சென்ற சரத் முத்தெட்டுவேகம, ஓய்வு பெற்ற விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக போன்றவர்களும் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டவர்கள். அதனை வெளிப்படையாக ஆதரித்தவர்கள்.

அதேநேரம் தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்த வாசுதேவ நாணயக்கார, ராஜித சேனாரட்ண, டி.யூ.குணசேகர போன்ற அரசியல்வாதிகள் பின்னாளில் பதவிக்காக தமது கொள்கைகளிலிருந்து விலகிக்கொண்டனர்.

இத்தகைய மாறுபட்ட கருத்துக்களும், கருத்தியல் விலகல்களும் எங்கும் இருக்கவே செய்யும். அவை விமர்சனத்துக்குட்படுவது அரசியல் புலங்களில் ஏற்புடையவை.

ஆனால் ஒருவர் எந்தக் கருத்தைக் கொண்டிருந்தாலும் அவர் உண்மை என்பதிலிருந்து எப்போதும் விலகி விடக்கூடாது. அவ்வாறு உண்மையிலிருந்து விலகுவாராயின் அவரால் இந்த நாடு மோசமான விளைவுகளையே சந்திக்கும்.

அவ்வகையில் சர்வகட்சிக்குழுவின் தலைவரும் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஓர் முக்கியமான கருத்தை எடுத்துக் கூறியுள்ளார்.

அதாவது இனப்பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காணப்படவேண்டும். அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்படவேண்டும்.

இதனை நாம் செய்யத் தவறுவோமாயின் பிரபாகரன் போன்ற பலர் இந்த நாட்டில் உருவாகுவர் எனத் தெள்ளத் தெளிவாகக் கூறியுள்ளார்.

அவரின் கருத்து துணிந்து கூறப்பட்டது மட்டுமல்ல,அதில் நிறைந்த யதார்த்தமும் உள்ளது. எனவே இலங்கை அரசு இந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தை அடைய விரும்பினால், தமிழ் மக்களின் நீண்ட காலப் பிரச்சினைக்கு தகுந்த தீர்வு காணவேண்டும்.

இல்லையேல் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பதை பேராசிரியர் திஸ்ஸ விதாரணவிடம் கேட்டறிந்து கொள்ளலாம்.

# தேர்தல்களைக் கண்காணிப்பதற்கு சர்வதேச கண்காணிப்பாளர்களை நியமிக்க கோரிக்கை

## பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரொஹான் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ். மாநகரசபை மற்றும் வவுனியா நகரசபைக்கான தேர்தல்களைக் கண்காணிப்பதற்கு சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் வரழைக்கப்படவேண்டுமென இலங்கையின் முன்னணி தேர்தல் கண்காணிப்பு அமைப்பொன்று தெரிவித்துள்ளது.

ஊவா மாகாணசபைத் தேர்தலைக் கண்காணிப்பதற்கு 700 கண்காணிப்பாளர்களும் யாழப்;பாணம் மற்றும் வவுனியா தேர்தல்களில் 100 கண்காணிப்பாளர்களும் பணியாற்றவுள்ளனர். எனினும் சர்வதேசப் பணியாளர்கள் அழைக்கப்படவேண்டுமெனத் தமிழ்க் கட்சிகள் கோருகின்றன என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரொஹான் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

வேட்புமனுத் தாக்கல் செய்யும் திகதி முடிவடைந்ததும் தேர்தல்கள திணைக்களம் மற்றும் தேர்தல்கள் தொடர்பான அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாகவும் வெளிநாட்டுத் தேர்தல் கண்காணிப்பாளர்களை வரவழைப்பதாயின் தேர்தல்கள் திணைக்களத்திடமும் பாதுகாப்பு அமைச்சிடமும் அனுமதிபெறவேண்டியிருக்குமெனவும் பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் மொத்தமாக 8 இலட்சத்து 75 ஆயிரத்து 456 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருப்பதாகவும் அங்கு 814 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படுமெனவும் யாழ். மாவட்டத்துக்கான பதில் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 417 வாக்காளர்களுக்கும் வவுனியாவில் 24ஆயிரத்து 626 வாக்காளர்களும் பதிவாகியிருப்பதாகக் குறிப்பிட்ட அவர் இரண்டு பகுதிகளிலும் 85 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவிருப்பதாகவும் கூறினார். (ஓ-6)

# ஆணைக்குழு நியமிக்கும் வரையிலும் தேர்தல் ஆணையாளர் ஓய்வுபெற முடியாது

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழு நியமிக்கப்படும் வரையிலும் தேர்தல்கள் ஆணையாளர் ஓய்வு பெற முடியாது என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை வாய் மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின் போது ஜே.வி.பி. எம். பியான பேமசிறி மானகே தற்போதைய தேர்தல் ஆணையாளர் தொடர்பில் கேட்டிருந்த கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

தற்போதைய தேர்தல்கள் ஆணையாளரான தயானந்த திஸாநாயக்க 1995ஆம் ஆண்டு பெப்ரவரி 17ஆம் திகதி இப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். அவரது பதவிக்காலம் 2001 ஜனவரி 21ஆம் திகதி நிறைவடைந்தது. எனினும் அவரதுபதவிக் காலத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் 2002 ஜனவரி 20ஆம் திகதி நீடிக்கப்பட்டது. அன்று ஐக்கிய தேசிய முன்னணியே ஆட்சியில் இருந்தது.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்ற போது இப்பதவியிலிருந்து தனக்கு சுதந்திரத்தை பெற்றுக்கொடுக்குமாறு கோரினார். அதற்கு ஜனாதிபதியும் தலைவணங்கினார். எனினும், குறிப்பிட்ட காலத்திற்குள் அரசிலிருந்து ஜே.வி.பி. விலகி ஆணைக்குழுவிற்கு தமது உறுப்பினரை நியமிக்க வேண்டும் என்று கோரியதுடன் இதனால் எதிர்க்கட்சியில் சுமார் ஒன்றரை வருடங்களுக்கு இழுபறி நிலைமை தோன்றியது.

இவ்வாறானதொரு நிலையிலேயே ஆணைக்குழுவிற்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படவில்லை என்பதுடன் தேர்தல் ஆணைக்குழு நியமிக்கும் வரை ஓய்வூதியம் பெறமுடியாது என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஓ-6)

## பொலிஸ்மா அதிபரின் நியமனம் சட்டவிரோதமானது -ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்ரமரட்னவின் நியமனம் சட்டத்திற்கு புறம்பானதென ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது. சுயாதீன ஆணைக்குழுக்களோ அல்லது அரசியல் சாசன சபையோ நிறுவப்படும் வரையில் நேர்மையான முறையில் உயர் பதவிகளுக்கு ஆட்களை நியமிக்க முடியாதென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அரசியல் சாசனத்தின் அடிப்படையிலேயே பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்படவேண்டும் எனவும் எனினும் அரசியல் நோக்கங்களுக்காக தற்போது நியமனங்கள் வழங்கப்படுவதாகவும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பக்கச் சார்பற்ற முறையில் சுயாதீனமாக இவ்வாறான பதவிகளுக்கு ஆட்கள் நியமிக்கப்படவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். அரசியல் நியமனங்களின் மூலம் ஒரு போதும் நாட்டின் சட் டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்ட முடியாதென அவர் குறிப் பிட்டுள்ளார். நாடாளுமன்றில் நடைபெற்ற விவாதமொன்றின் போது அவர் இந்தக் கருத்துக்களை முன் வைத்துள்ளார். (ஓ-6)

## இடம்பெயர்ந்த மக்களின் மருத்துவதேவைக்கு பாகிஸ்தான் 70 ஆயிரம் அமெ.டொலர் நிதியுதவி

(கொழும்பு)

இடம்பெயர்ந்த மக்களுக்கு தேவையான மனிதாபிமான உதவிகளை வழங்கும் பொருட்டு பாகிஸ்தான் அரசாங்கம் நிதியுதவியாக 70 ஆயிரம் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் யூசுப் கிலானியின் பணிப்புரையின் பேரில் இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவரினால் இந்த காசோலை வழங்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களுக்கான மருத்துவ வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க இந்த நிதியுதவி பயன்படுத்தப்பட வுள்ளது. (ஓ-6)

# ஆணவம் அழிவைத் தரும்-பாபா

தீக்குச்சி ஒன்று தீப்பெட்டியைப் பார்த்து நீ எங்களைப் பாதுகாப்பதாக கூறிக்கொண்டு எங்களுடன் உரசி உரசியே எங்களை அழித்துவிடுகிறாயே, இது நியாயமா? என்று கேட்டது. அப்போது தீப்பெட்டி கூறியது; உங்களுக்குத் தலைக் கனம் இருக்கும் வரை உங்களின் அழிவை யாராலும் தடுக்க முடியாது. இதற்கு நான் பாத்திரவாளியல்ல என்றது. ஆதலால் ஒருவருடைய அழிவுக்கோ துன்பத்திற்கோ மூல காரணம் தலைக் கனம் எனும் ஆணவமே. இந்த ஆணவம் இருக்கும் வரை அவல அழிவிலிருந்து விலகி வாழ முடியாது. இந்த ஆணவத்தின் பக்கபல ஆயுதங்களே ஆசை ,குரோதம், லோபம், மோகம்,மதம்,பொறாமை என்பனவாகும். பகவான் அருளுகின்றார் ! விஜயதசமி அன்று தொழில் செய் கருவிகளை வைத்து பூசைசெய்வது மட்டுமல்ல ஆயுத பூசை மேற்கூறப்பட்ட ஆசை , குரோதம் போன்ற ஆயுதங்களையும் இறைவனிடம் ஒப்படைத்து பூசை செய்தலே ஆயுத பூசை எனப்படும் என்கின்றார்.

ஆசை அதிகமாக இருந்தால் அது மனிதனை முழுமையாக ஆக்கிரமித்து விடும். அதனை இறைவனை நோக்கிச் செலுத்துங்கள். அவை இறைவனை வணங்கவும் கருணையைப் பெறவும் உந்து ஊக்கியாய் மாறிவிடும்.

குரோதம் என்றால் கோபம். இந்த கோபத்தை இறைவன் பக்கம் திருப்பு. இறைவன் ஏன் என்னைப் பார்ப்பதில்லை. நான் அவருக்கு என்ன தவறு செய்தேன் என்று கோபப்படுங்கள். அப்போது அது நற்குணமாக மாறி விடும்.

லோபம் என்பது கஞ்சத்தனம் அதனையும் இறைவன் பால் செலுத்து. இறைவன் எனக்கு மட்டும் தான் . அவர் வேறு யாருக்கும் சொந்தம் அல்ல. அப்போது இந்த கஞ்சத் தனம் இறைவனைப் பற்றிப் பிடித்து சொந்தம் கொண்டாட வைக்கும்.



மோகம் இதுவும் ஒரு வகையான ஆசையே இதற்கு விவேகம் கிடையாது. இந்த ஒரு வகையான ஆசையையும் இறை வன் பால் திருப்பலாம். இறைவன் இன்றி என்னால் வாழ முடியாது. இறைவன் இன்றி மகிழ்ச்சி இல்லை. வாழ்வில் அர்த்தமும் இல்லை .அப்போது இந்த ஆசை இறைவன் மேல் கண் மூடித்தனமான ஆசையாய் மாறி விடும்.

மதம் என்றால் பெருமை கலந்த அகங்காரம் இதனையும் இறைவனை நோக்கி செலுத்தினால் எம்மை எவரும் ஒன்றும் செய்ய முடியாது. எனக்கென்று இறைவனின் உதவி இருக்கின்றது. இறைவன் என்னை ஒரு நாளும் கைவிடமாட்டான் என இறைவன் பால் மதம் கொள்ள வைத்துவிடும்.

பொறாமையையும் எனது கடவுள் எனக்கு மட்டுமே சொந்தமான கடவுள் ஏன் என்னை விட்டு விலகிச் செல்கின் றார் என இறைவன் மீது செலுத்தினால் ஆணவம் தலை கீழாகும். ஆனந்தமான வாழ்வு பெருகும்.

ஜெய்சாயிராம்

யாதவன்

# யாழ்.மாவட்டத்தில் காளான் செய்கை

இயற்கையாக எமது சூழலில் உருவாகின்ற மொட்டு வடிவிலான காளானை அவை மலர்வதற்கு முன் அறுவடை செய்து உணவாக உள்ளெடுக்கும் பழக்கமானது எமது மூதாதையரிடமிருந்து இன்றுவரை கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது யாழ். குடாநாட்டின் வருமானம் பெற்றுத்தரும் ஒரு சுயதொழிலாக காளான் வளர்ப்பானது தோற்றம்பெற்றுள்ளது.



அறுவடைப்பருவத்திலுள்ள காளானின் கனியுடலம்

தாவரங்களின் பரிணாம வளர்ச்சியில் ஆரம்ப காலத்தில் தோன்றி விருத்தியடையாத தாவரங்களில் பூஞ்சணமும் ஒன்றாகும். பூஞ்சணங்கள் தமது இனப்பெருக்கத்திற்குத் தேவையான வித்திகளை பூக்கள் போன்ற வடிவங்களில் உற்பத்தி செய்கின்றன. பூக்கள் போன்ற கனியுடலமே காளான் என அழைக்கப்படுகின்றது.

தாவரங்களில் பச்சையம் உள்ளது போன்று பூஞ்சணங்களில் பச்சயம் காணப்படுவதில்லை. காளான் ஒரு தாவர உணவாகும். எனவே அசைவ உணவை உட்கொள்ளாத மக்களும் காளானை தமது உணவில் சேர்த்துக் கொள்ளமுடியும்.

இன்றைக்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்பிருந்தே இயற்கையாக வளரும் காளானை மனித உணவிற்காக பயன்படுத்தி வந்துள்ளனர். இயற்கையாக வளரும் காளான் அனைத்தும் உணவிற்கு பயன்படுத்த முடியாது. இயற்கையாக வளரும் காளானில் உணவுக்கு பயன்படுத்தக்கூடிய காளானை சரியான முறையில் இனங்கண்டு உணவிற்குப் பயன்படுத்தவேண்டும். அண்மைக் காலத்தில் காளானை உணவில் சேர்த்துக் கொள்வதில் மக்களுக்குள்ள ஆர்வம் அதிகரித்து வருகிறது. இதனைக் கருத்திற்கொண்டு தமது தேவைக்கும், வருமானம் பெறவும் சில வீடுகளில் காளான் செய்கை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குறைந்த இடப்பரப்பில் இலகுவாகக் கிடைக்கக்கூடிய மூலப்பொருட்களைப் பயன்படுத்தி காளான் உற்பத்தியை மேற்கொள்ளமுடியும். அதேவேளை 35-45 நாட்களில் முதலாவது அறுவடையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### போசணைச் சத்துக்கள்

*100கிராம் அறுவடை செய்யப்பட்ட புதிய காளான்களில் அடங்கியுள்ள போசணைப் பொருட்கள்*

| | |
|---|---|
| நீர் | -91 கிராம் |
| சக்தி | -13கிலோ கலோரி |
| புரதம் | -2.5 கிராம் |
| கொழுப்பு | -0.3 கிராம் |
| கல்சியம் | -20 மில்லிகிராம் |
| இரும்பு | -01 மில்லிகிராம் |
| தயமின் | -120 மைக்கிரோ கி. |
| றைபோபிளேவின் | -500 மைக்கிரோ கி. |
| நயாசின் | -5.8 மில்லி கிராம் |
| விற்றமின் சீ | -3மில்லிகிராம் |

காளானில் புரதம், பல்வேறு விற்றமின்கள், கனியுப்புகள் என்பன காணப்படுகின்றன.

இறைச்சி,மீன், பால்,பட்டர் போன்ற பல்வேறு விலங்கு உணவில் காணப்படும் புரதத்தை போன்று காளான் புரதமும் தரத்தில் சிறந்தது.முக்கியமாக தானியப் பொருட்களை உண்ணும்போது காளானையும் சேர்த்துக் கொள்வதன் மூலம் உடலுக்குத் தேவையான தரமான புரத அளவை அதிகரிக்கமுடியும்.

### பூஞ்சணங்களின் வகைகள்

பூஞ்சணங்களில் காணப்படும் இயல்புகளுக்கேற்ப அவை விஞ்ஞான ரீதியாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. உணவிற்காகப் பயன்படுத்தப்படும் காளான் கணம் அகாரிக்கஸ் (Agaricus) வகுப்பு பசிடியோமசிடிஸில் சேர்க்கப்பட்டுள்ளது.

### உணவிற்காகப் பயன்படுத்தப்படும் காளான் இனங்கள்

வைக்கோல் காளான், சிப்பி காளான் ,மொட்டுக்காளான்,சிடாகோ காளான், அபலோன் காளான் ஆகிய வகைக் காளான் கள் உணவிற்காகக் பயன்படுத்தப்படுகின்றது.

இலங்கைக்கு பொருத்தமான காளான் இனங்கள் சிப்பிகாளான், வைக்கோல் காளானாகும். இவற்றில் சிப்பிக்காளான் இனமே அதிகளவில் செய்கை பண்ணப்படுகின்றது.

இதில் சிப்பி காளானில் அமெரிக்கன், பூட்டன் ஆகிய இருவர்க்க இனங்களை அதிகளவில் உணவிற்குப் பயன்படுத்துகின்றனர்.

### காளான் உற்பத்திக்கு வேண்டப்படும் உத்தம காலநிலை

- அடைகாக்கும் அறையில் வெப்பநிலை 18-25 பாகை செல்சியஸ் ஆக இருத்தல் வேண்டும்.
- அறுவடை அறையினுள் வெப்பநிலை 25-30 பாகை செல்சியஸ் இருத்தல் வேண்டும்.
- சாரீரப்பதன் இரண்டு அறையிலும் 75-85 வீதமாக இருத்தல் வேண்டும்.

### யாழ்.மாவட்டத்தில் நிலவும் காலநிலை பொருத்தத்தன்மை

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் யாழ்.மாவட்டத்தின் 2007,2008 ஆம் ஆண்டுகளில் நிலவிய வெப்பநிலை விபரம் காளான் உற்பத்திக்குத் தேவையான உத்தம வெப்பநிலையை விடக் கூடுதலாக உள்ளமையைத் தெளிவுபடுத்துகின்றது. ஆகையினால் சிறப்பான காளான் உற்பத்தியைப் பெறுவதற்கு கொட்டிலில் குறைந்த வெப்ப நிலையைப் பேணுவதற்கு உரிய முறைகளைக் கையாளுதல் அவசியமாகும்.

- கூரையினை கிடுகினால் வேய்தல்
- தகரம் அல்லது சீற்றிடப்பட்ட கூரையாயின் தும்பேயியா அல்லது கொடித்தோடை என்பவற்றை அதன் மீது படரவிடுதல்.

| மாதம் | 2007 | 2008 |
|---|---|---|
| தை | 69 | 72 |
| மாசி | 66 | 67 |
| பங்குனி | 66 | 76 |
| சித்திரை | 67 | 74 |
| வைகாசி | 70 | 75 |
| ஆனி | 71 | 71 |
| ஆடி | 74 | 73 |
| ஆவணி | 73 | 76 |
| புரட்டாதி | 75 | 71 |
| ஐப்பசி | 77 | 74 |
| கார்திகை | 77 | 77 |
| மார்காழி | 79 | 76 |

### கொட்டில் அமைத்தல்

கொட்டிலை அமைக்கும் இடத்தைத் தெரிவு செய்யும் போது நீர்தேங்கி நிற்காத நிழல் உள்ள இடத்தில் அமைத்தல் வேண்டும் . கொட்டில் அடைகரக்கும் அறை, அறுவடை அறை என இருபகுதிகளாக இருக்கவேண்டும்.

### காளான் வளர்ப்பு படிமுறைகள்

*1. ஊடகக்கலவை தயாரித்தல்*

*தேவையான பொருட்கள்*

- மரத்தூள் (மா,பலா)
- அரிசித்தவிடு
- பயற்றம்மா
- கல்சியம் காபனேற் (நீர்ச்சுண்ணாம்பு)
- மக்னீசியம் சல்பேற் (பேதியுப்பு)
- 7 அங்குல அகலமும் 13 அங்குல நீளமும் கொண்ட பொலிபுறப்பலின் பைகள்
- 1அங்குல விட்டமுடைய 1/2 அங்குல உயரமான PVC குழாய்கள்
- பஞ்சு
- இறப்பர் பட்டிகள்
- கடதாசி

மரத்தூளில் செய்கை பண்ணப்படும் காளான் உற்பத்திக்கு பாரம் குறைவான மா, பலா போன்ற மரத்தூள் பயன்படுத்தமுடியும். அத்துடன் ஊடகக் கலவையாக அரிசித்தவிடு, பயிற்றம்மா, கல்சியம் காபனேற்று, பேதிஉப்பு,நீர் என்பன பயன்படுத்தப்படல் வேண்டும். ஊடகத்தின்PH ஆனது 5.5-6.5 இற்கு இடைப்பட்டதாக இருத்தல்வேண்டும்.

### செய்முறை

நிலத்தில் பொலித்தீனை விரித்து அதன் மேல் மரத்தூளை பரவி அதனுடன் அரிசித்தவிடு, பயற்றம்மா,கல்சியம் காபனேற்று ஆகியவற்றைச் சேர்த்துக் கலக்கவும். பின் பேதியுப்பை நீரில் கரைத்து, அக் கரைசலை மேற் குறித்த கலவையின் மீது தெளிவான நீர் சேர்த்து நன்றாகக் கலந்து ஊடகக் கலவை பெறப்படும்.

### யாழ். மாவட்டத்தில் நிலவிய 2007, 2008 ஆண்டிற்கான மார்தாந்த வெப்பநிலை

| மாதம் | மாதாந்த உயர் வெப்பநிலை | | மாதாந்த இழிவு வெப்பநிலை | | மாதாந்த சராசரி வெப்பநிலை | |
|---|---|---|---|---|---|---|
| | 2007 | 2008 | 2007 | 2008 | 2007 | 2008 |
| தை | 29.7 | 29.5 | 22.2 | 21.4 | 26 | 25.5 |
| மாசி | 30.8 | 31.1 | 22 | 21.9 | 26.4 | 26.5 |
| பங்குனி | 33.4 | 30.7 | 22.1 | 23.6 | 27.7 | 27.1 |
| சித்திரை | 33.8 | 32.4 | 25.5 | 25.8 | 29.7 | 29:1 |
| வைகாசி | 34.3 | 32. | 28.4 | 27.7 | 31.3 | 29.1 |
| ஆனி | 32.7 | 32.3 | 27.5 | 27.6 | 30.1 | 30 |
| ஆடி | 31.7 | 32 | 26.6 | 26.9 | 29.2 | 29.5 |
| ஆவணி | 31.8 | 31.5 | 26.5 | 26.3 | 29.1 | 28.1 |
| புரட்டாதி | 31.5 | 32 | 26.6 | 26.9 | 29.1 | 29.5 |
| ஐப்பசி | 30.9 | 31.8 | 25.3 | 24.8 | 28.1 | 28.3 |
| கார்த்திகை | 30 | 28.8 | 22.9 | 23.5 | 26.5 | 26.1 |
| மார்கழி | 28.9 | 29.3 | 22.5 | 23 | 25.7 | 26.1 |

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் யாழ்.மாவட்டத்தில் 2007,2008 ஆம் ஆண்டுகளில் நிலவிய சாரீரப்பதன் விபரம் காளான் உற்பத்திக்குத் தேவையான உத்தம சாரீரப்பதன் வீதத்தினை விடக் குறைவாக உள்ளமையைத் தெளிவுபடுத்துகின்றது. ஆகையால் சிறப்பான காளான் உற்பத்தியைப் பெறுவதற்கு கொட்டிலில் கூடிய சாரீரப்பதனை பேணுவதற்கான முறைகளை கையாளுதல் அவசியமாகும்.

கொட்டிலில் குறைந்த மட்டத்தில் வெப்பநிலையை பேணுவதற்கும், சாரீரப்பதனை அதிகரிப்பதற்கும் பின்வரும் முறைமைகளைக் கையாளுதல் வேண்டும்.

- அறையில் 2அங்குல உயரத்திற்கு மணலைப் பரப்பி ஈரப்படுத்தல்
- சுவர்களில் சாக்குகளை தொங்கவிட்டு தொடர்ச்சியாக ஈரப்படுத்தல்

தயார் செய்யப்பட்ட ஊடகக் கலவையினால் நிரப்புதல்



7 அங்குல அகலம்,13 அங்குல நீளமான பொலிப்புறப்பலீன் பைகளில் 3/4 பகுதிக்கு கலவையை இறுக்கமாக நிரப்பவும். பையின் திறந்த பகுதியூடாக PVC குழாய்த்துண்டை உட்புகுத்தி வாய்ப்பகுதியை பஞ்சினால் அடைத்துவிடவும். பஞ்சை கடதாசித் துண்டினால் மூடி இறப்பர் பட்டியை இடவும்.

*2.தொற்று நீக்கம் செய்தல்*

தயார் செய்ப்பட்ட ஊடகப் பைகளை நீராவியில் 2-4 மணித்தியாலங்கள் தொற்று நீக்கம் செய்து பின் ஊடகப் பைகள் ஒருநாள் வரை குளிர்வடைய விடப்படும்.

ஊடகப் பைகளுக்கு வித்தி இடல்



- எளிதாக்கப்பட்ட காளான் வித்தி 5 கிராம் தொற்று நீக்கம் செய்த ஊடகப் பையினுள் இடப்படும்.
- ஊடகக் பையினுள் இடப்படும் வித்தியானது வெள்ளை நிறமானதாகும் மணமற்ற தரமான வித்தியாகவும் இருத்தல்வேண்டும்.
- ஊடகக் கலவையினுள் வித்தி இடும் பொழுது மெழுகுதிரிச் சுவாலை அல்லது மதுசார விளக்கினை ஏற்றிவைத்து வித்தி இடப் படும்.
- மீண்டும் வாய்ப் பகுதியானது கடதாசியினால் மூடி இறப்பர்பட்டி இடப்பட்டு அடைகாக்கும் அறையில் வைக்கப்படும்.

### அடைகாக்கும் அறை

- அடைகாக்கும் அறையானது இருட்டாகவும், வெப்பநிலை குறைவாகவும் இருத்தல் வேண்டும். தயார் செய்யப்பட் ஊடகப் பைகளில் பூஞ்சணங்கள் வளரும் வரை சேமித்து வைப்பதற்கு இரண்டு பக்கமும் திறக்கக் கூடியவாறு பல தட்டுக்களை உடைய இறாக்கைகளை (2' அகலம் 6' நீளம் 6'உயரம் உடைய இறாக்கை) தேவைக்கு ஏற்றவாறு அமைத்துக்கொள்ளப்படும்.
- இறாக்கைகளை அமைப்பதற்கு மூங்கில் தடிகளைப் பயன்படுத்தி அல்லது பலகைகளைப் பயன்படுத்தி இறாக்கைகள் அமைக்கப்படும்.
- அணில், எலி போன்றவற்றில் இருந்து பாதுகாப்பதற்கு இறாக்கையில் வெளிப்பகுதி கம்பி வலையினால் மூடி அடைத்து விடப் படும்.
- இறாக்கையின் வெளிப்பகுதிக்கு சாக்கினைக் கட்டி ஈரப்படுத்துவதனாலும், அதன் மேல் கறுப்பு பொலித்தீனை மூடிக்கட்டுவதனாலும் இருள் நிலைமையை வழங்க முடியும்.

இறாக்கையில் வைக்கப்பட்ட ஊடகப் பைகள்



- அடைகாக்கும் அறையானது காளான் விதத்தியின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு அறை இருட்டாகவும் சாரீரப்பதன் 75-85 வீதமும் வெப்பநிலை 18-25 பாகை செல்சியஸ் ஆக இருத்தல்வேண்டும்.அறையினுள் (இருட்றை) 21-30 நாட்கள் பங்கஸ் வளர்ச்ச்சிக்கு வைக்கப்படும்.

செல்வி .ஸ்ரீரூபி கந்தசாமி
விவசாயப் போதனாசிரியர்
பிரதி விவசாயப் பணிப்பாளர்(விரி) அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

- பங்கஸ் வித்தியின் இழையம் முழுமையாக வளர்ச்சியடைந்த பின் வாய்ப்பகுதியை வெட்டி அகற்றி அறுவடை அறைக்கு மாற்றப்படல் வேண்டும்.

(தொடரும்)

# காயத்தை மறைத்தால் அணியில் இடம் இல்லை

## வீரர்களுக்கு தோனி எச்சரிக்கை

(ஜமேக்கா)

இந்திய அணித்தலைவர் தோனி, அணி வீரர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். அணியின் நலனுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ள இவர் காயமடைந்த வீரர்களுக்கு அணியில் இடம் இல்லை என தெரிவித்துள்ளார்.

அண்மையில் இங்கிலாந்தில் நடந்த இருபது-20 உலகக் கோப்பைத் தொடரில் இந்திய அணி சுப்பர்-8 சுற்றோடு வெளியேறியது. இதற்கு பெரும்பாலான வீரர்கள் முழு உடல் தகுதி இல்லாமல் பங்கேற்றதே முக்கிய காரணம் என கூறப்பட்டது.

உதாரணமாக வலது தோள்பட்டையில் இலேசான வலி என்று சேவாக் முதலில் கூறியுள்ளார். பின்னர் லண்டனில் சோதனை செய்த போது சத்திரசிகிச்சை செய்யும் அளவுக்கு பெரிய பாதிப்பு இருந்தது கண்டறியப்பட்டது. இதையடுத்து அணியில் இருந்து கடைசி நேரத்தில் நீக்கப்பட்டார்.

இது தொடர்பாக அணித்தலைவர் தோனி மற்றும் சேவாக் இடையே மோதல் ஏற்பட்டதாக செய்திகள் வெளியாயின. காயத்தின் உண்மை தன்மையை சேவாக் தன்னிடம் தெரிவிக்கவில்லை என தோனி ஆதங்கப்பட்டுள்ளார்.

### அதிரடி ஆலோசனை

இந்தச் சூழலில் இந்திய அணி அடுத்த கட்டமாக நான்கு ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சென்றுள்ளது. முதல் போட்டி நாளை நடக்கிறது. இத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்பாக சக வீரர்களிடம் மிகவும் காட்டமாக பேசியுள்ளார் தோனி.

காயம் மற்றும் நூறு சதவீத உடல்தகுதி இல்லாத வீரர்கள் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டுமென எச்சரிக்கை விடுத்துள்ளார். உலகக் கோப்பை போட்டிகளில் யுவராஜ்,ஹர்பஜன்,காம்பீர் போன்றவர்கள் சோபிக்கவில்லை. எனவே மேற்கிந்தியத் தீவுகள் மண்ணில் மூத்த வீரர்கள் கூடுதல் பொறுப்புடன் செயல் பட வேண்டும் என்று சூசகமாக கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக சக வீரர்களிடம் தோனி கூறியதாவது;




என்னை பொறுத்தவரை தனிப்பட்டவர்களை காட்டிலும் அணிக்கு தான் முன்னுரிமை அளிப்பேன். இதையேதான் அணியில் உள்ள ஒவ்வொரு வரும் கடைப்பிடிப்பார்கள் என நம்புகிறேன். காயம் தொடர்பான உண்மையை மறைக்காதீர்கள். அணிக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய வகையில் காயம் அடைந்திருந்தாலோ அல்லது தனிப்பட்ட பிரச்சினைகள் இருந்தாலோ அது பற்றி உண்மை நிலையை தெரிவிக்க வேண்டும்.

காயத்துக்கு சிறிது காலம் ஓய்வு தான் தீர்வு என்றால் அதனை ஒவ்வொரு கிரிக்கெட் வீரரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். சோர்வோடும் வலியோடும் பங்கேற்றால் அது அணிக்கும் அவருக்கும் பின்னடைவு ஏற்படுத்தும். அணியில் இருந்து பிரேக் எடுத்துக் கொள்ள விரும்பினால் என்னிடம் அல்லது இந்திய கிரிக்கெட் சபையிடம் தெரிவிக்கவும். அணியின் நல னுக்காக மூத்த வீரர்கள் இன்னும் அதிகமான திறமையை வெளிப்படுத்த வேண்டும். இளைய வீரர்கள் தங்களது பொறுப்பை உணர்ந்து செயல் படுவது மிகவும் அவசியம் வீரர்கள் வெற்றியை பழக் கமாக கொள்ள வேண்டும். இவ்வாறு தோனி தெரி வித்துள்ளார்.

## பன்றிக்காய்ச்சலால் இந்திய வீரர்கள் அச்சம்

மேற்கிந்தியத்தீவுகளில் பன்றிக் காய்ச்சல் மிக வேகமாக பரவி வருவதால் இந்திய வீரர்கள் பீதியில் உள்ளனர்.

ஹோட்டலை விட்டு வெளியே வரவே அச்சப்படுகின்றனர். அசைவ உணவு பக்கம் தலைகாட்டுவதில்லையாம். மேற்கிந்தியத்தீவில் உள்ள டிரினிடாட்,டுபாகோதீவுகளில் 18 பேர் பன்றிக்காய்ச்சல் வைரசால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதையடுத்து இங்கு நடக்க இருந்த கரீபியவிளையாட்டு மற்றும் இளைஞர் கால் பந்துக்கோப்பை போட்டிகள்ரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்த தீவுகளில் இந்திய அணி எந்தவொரு போட்டியிலும் பங்கேற்காதது வீரர்களுக்கு ஆறுதல் அளிக்கும் விடயம். முதலிரண்டுபோட்டிகள் (ஜுன் 26,28) ஜமைக்காவிலும் 3,4 ஆவது போட்டி (ஜுலை 3,5) செயின்ட்லூசியாவிலும் நடக்க உள்ளன ஆனாலும் இந்திய வீரர்கள் மிகுந்த முன் எச்சரிக்கையுடன் உள்ளனர்.

## இலங்கை அணி நாடு திரும்பியது



ஐ.சி.சி. இருபது-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்குபற்றுவதற்காக இங்கிலாந்துக்குச் சென்றிருந்த இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் நேற்று நாடுதிரும்பினர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்து இறங்கிய குமார் சங்கக்கார தலைமையிலான இலங்கை அணி வீரர்களை இலங்கை கிரிக்கெட் நிறுவன அதிகாரிகள் வரவேற்றனர்.

பின்னர் இலங்கை அணி வீரர்கள் மதவழிபாட்டில் ஈடுபட்டனர்.

இருபது-20 தொடரின் இறுதிப் போட்டியில் கடந்த 21ஆம் திகதி பாகிஸ்தானை எதிர்தாடிய இலங்கை அணி சம்பியனாகும் வாய்ப்பை இழந்து ரண்னர் அப் எனும் இரண்டாவது ஸ்தானத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## பங்களாதேஷ் அணித்தலைமை பதவி; அஷ்ரபுல் நீக்கம்;மோர்தஸா நியமனம்



பங்களாதேஷ் அணியின் தலைமை பதவியில் இருந்து மொஹம்மட் அஷ்ரபுல் நீக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்தில் நடந்து முடிந்த இருபது-20 உலகக் கிண்ண தொடரின் முதல் சுற்றுடனேயே பங்களாதேஷ் அணி வெளியேறியதைத் தொடர்ந்தே அந்நாட்டு கிரிக்கெட் சபை இந்த முடிவை எடுத்துள்ளது.

அத்துடன் பங்களாதேஷ் அணியின் உப தலைவராக செயல்பட்டுவரும் வேகப்பந்து வீச்சாளர் மஷ்ரபி மோர்தஸா புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ.சி.சி. ஒருநாள் சகலதுறை ஆட்டக்காரர்களுக்கான தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் ஷகீப் அல் ஹஸன் உப தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

24 வயதான மொஹம்மட் அஷ்ரபுல், ஹபீபுல் பஷாரத்தைத் தொடர்ந்து கடந்த இரண்டு ஆண்டுகளாக பங்களாதேஷ் அணியின் தலைவராக செயல்பட்டு வந்துள்ளார்.

எனினும் அவரது தலைமையில் பங்களாதேஷ் அணி 38 ஒருநாள் போட்டிகளில் வெறும் 8 ஆட்டங்களில் மாத்திரமே வென்றுள்ளதோடு எஞ்சிய 30 போட்டிகளிலும் தோல்வியைச் சந்தித்துள்ளது.

அதேபோன்று கடந்த இரண்டு ஆண்டுகளில் பங்களாதேஷ் அணி விளையாடிய 13 டெஸ்ட் போட்டிகளில் அஷ்ரபுல் ஒரு வெற்றியைக் கூட பெற்றுக்கொடுக்கவில்லை.

இதில் 12 டெஸ்ட்களில் பங்களாதேஷ் தோல்வி அடைந்ததோடு ஒரு போட்டி சமநிலையில் முடிந்தது.

இதுமட்டுமல்லாது அஷ்ரபுல் லின் தலைமையில் பங்களாதேஷ் விளையா டிய 11 இருபது-20 போட்டிகளில் 2 ஆட்டங் களை மாத்திரம் வெல்ல முடிந்துள்ளது.

இதேவேள்ள மேற்கிந்தியத்தீவுகளுடனான டெஸ்ட் தொடருக்கான பங்களாதேஷ் அணியும் நேற்று அறிவிக்கப்பட்டது.

மேற் கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற் கொள்ளும் பங்களாதேஷ் அணி அங்கு இர ண்டு டெஸ்ட் 3 ஒருநாள் மற்றும் ஒரு இருபது-20 போட்டிகளில் விளையாடவுள்ளது. இதற்கான 15 பேர் கொண்ட பங்களா தேஷ் அணியில் புதுமுக வீரராக விக்கெட் காப்பாளர் சாகிர் ஹொஸைன் இடம் பிடித் துள்ளார்.

## விம்பிள்டன் டென்னிஸ் 2-வது சுற்றில் டேவிடென்கோ வீனஸ்,ஜான்கோவிச் அசத்தல்

(லண்டன்)

விம்பிள்டன் டெனிஸ் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு ரஷ்யாவின் நிகோலே டேவிடென்கோ,ஜேர்மனியின் டாமி ஹாஸ் ஆகியோர் முன்னேறினர்.

பெண்கள் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ்,செர்பியாவின் ஜான்கோவிச் வெற்றி பெற்றனர்.

கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் லண்டனில் நடக்கிறது. நேற்றுமுன்தினம் நடந்த ஆண்கள்,ஒற்றையர் முதல் சுற்றுப்போட்டியில்,ரஷ்யாவின் நிகோலே டேவிடென்கோ,இங்கிலாந்தின் டானியல் இவன்சுடன் மோதினார்.

விறுவிறுப்பாக நடந்த இப் போட்டியில் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய டேவிடென்கோ 6-2,6-3,6-3 என்ற நேர்செட்களில் டானியலை வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு முதல் சுற்று ஆட்டத்தில் ஜேர்மனியின் டாமி ஹாஸ்,அலெக்சாண்டர் பெயாவுடன் மோதினார்.

முதல் செட்டை 6-7 என போராடி கோட்டைவிட்ட டாமி ஹாஸ் அடுத்த மூன்று செட்களை 7-6,6-3,6-4,என தன்வசப்படுத்தினார்.



இறுதியில் டாமி ஹாஸ் 6-7,7-6,6-3,6-4 என்ற செட்கணக்கில் அலெக்சாண்டரை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

### டெல்போட்ரோ அசத்தல்

மற்ற முதல் சுற்றுப் போட்டிகளில் ஆர்ஜென்டினாவின் டெல்போட்ரோ,பிரான்ஸின் அர்னாட் கிளமன்டையும்,ரஷ்யாவின் இகோர் குனிட்ஸ்யன்,பல்கேரியாவின் கிரிகர் டிமிட்ரோவையும்,சிலியின் கோன்சலஸ்,ரஷ்யாவின் கபஸ்வில்லியையும் வீழ்த்தினர்.

### வீனஸ் அபாரம்

பெண்கள் முதல் சுற்று ஆட்டத்தில் மூன்றாம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ்,சுவிட்சர்லாந்தின் ஸ்டெபனியை எதிர்கொண்டார்.

நெருக்கடி இன்றி ரிலாக்சாக ஆடிய வீனஸ் 6-3,6-2 என்ற நேர் செட்களில் ஸ்டெபனியை வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்கு காலடி வைத்தார். மற்றொரு போட்டியில் முன்னணி வீராங் கனையான செர்பியாவின் ஜெலினா ஜான் கோவிச் 6-4,7-6 என்ற செட் கணக்கில் ஜேர் மனியின் ஜுலியாவை வீழ்த்தினார்.

### ஸ்டோசர் வெற்றி

பெண்கள் ஒற்றையர் பிரிவின் மற்ற போட்டிகளில் அவுஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசர்,அமெரிக்காவின் பெத்தானியா மெடக்கையும்,உக்ரைனின் பண்டாரன்கோ, லட்வியாவின் செவாஸ்டோவாவையும், ரஷ்யாவின் மரியா கிரிலென்கோவையும்,செக் குடியரசின் பெட்ரா விடோவாவையும்,சீனாவின் நா லியையும், கஜகஸ்தானின் கலினாவையும் வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்குள் நுழைந்தார்.

மாநகர சபை, யாழ்ப்பாணம்



# இறுதி பஸ் சேவைகள் இரவு 7.30 மணிக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர மத்திய பஸ் தரிப்பிடத்திலிருந்து புறப்படும் இறுதி பஸ் சேவைகள் இன்று முதல் இரவு 7.30 மணியாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வடபிராந்திய போக்குவரத்து சபையின் பதில் பிரதான முகாமையாளர் சி.கே. செவ்வந்திராசா அறிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் இரவுநேர பொலிஸ் ஊரடங்குச் சட்டம் தற்போது இரவு 11 மணியிலிருந்து அமுல்படுத்துவதனாலேயே இப்புதிய நடைமுறை அமுலுக்கு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இதுவரை யாழ்.நகர மத்திய பஸ் தரிப்பிடத்திலிருந்து இறுதி பஸ் சேவைகள் மாலை 6 மணிக்கு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## இந்திய அரசு தெரிவித்த...

நன்மைபயப்பதாகவும் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய முக்கிய விடயமாகவும் அமையும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்ட இலங்கை அரச உயர் மட்டக் குழுவினர் நேற்று இந்திய வெளியுறவு அமைச்சரை புதுடில்லியில் சந்தித்துப் பேசிய தன் பின்னர் ஊடகவியலாளர்களிற்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பசில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்ததாவது,

ஆக்கபூர்வமான் ஒரு செய்தியை நாங்கள் இந்தியாவிடமிருந்து பெற்றிருக்கிறோம். எங்களிடம் அவர்கள் விடுத்த வேண்டுகோள்களில் பெரும்பாலானவற்றிற்கு நாங்கள் உடன்பட்டிருக்கிறோம். என்ன நடக்கப் போகிறது என்பது குறித்து நான் சொல்லுவது நல்லதல்ல. ஆனால் இது இலங்கையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு நன்மை பயப்பதாக நிச்சயமாக இருக்கும்.

இச்சந்திப்பின்போது இந்திய அரசு தனது கவலைகளை வெளிப்படுத்தியது. இந்தக் கவலைகளில் பெரும்பாலானவை தீர்க்கப்பட்டு விட்டன. நாங்கள் மிகவும் சுமுகமான நீண்டதொரு சந்திப்பை நடத்தினோம்.

ஒரு நட்பு ரீதியான அணுகுமுறையில் இந்தப் பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன. இச்சந்திப்பு இந்திய- இலங்கை மக்களுக்கு குறிப்பாக இலங்கையில் வடக்கே இருக்கும் மக்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். அது பலமாறுதல்களை ஏற்படுத்தும் என்று நான் நினைக்கிறேன் என அவர் தெரிவித்துள்ளார். (ந-14)

## ஆளும் ஐ.ம.சு. கூட...

யாழ்.மாநகர சபை மற்றும் வவுனியா நகர சபைத் தேர்தல்களில் ஈ.பி. டி.பி., ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தின் கீழ் போட்டியிடத் தீர்மானித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து வவுனியா நகர சபைக்கான வேட்பு மனு நேற்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இது இவ்விதமிருக்க, வடக்கு, கிழக்கு இணைந்த ஓர் அலகுதானா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பை மக்களிடமே விடுவதாக சமூகசேவைகள் மற்றும் சமூக நலன் புரித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற கொள்கையில் தமது கட்சி உறுதியாகவுள்ளது எனக் குறிப்பிட்ட அவர், தமிழ் மக்களின் பிரச்சினைக்கு 13-வது திருத்தத்திற்கு அப்பால் தீர்வு அமையுமெனவும் அனைத்துக் கட்சிகளும் இந்த நிலைப்பாட்டுக்கு வந்திருப்பதாகவும் கூறினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பாக யாழ்.மாநகர சபைத் தேர்தலில் நிறுத்தப்பட்டுள்ள வேட்பாளர்களின் விபரம் வருமாறு,

கயிலாசபிள்ளை தேவேந்திரன், மாணிக்கம் கனகரத்தினம், துரைராசா இளங்கோ, அப்புத்துரை மனுவல் மங்களநேசன், செல்லையா நியூட்டன் ஜெயக்குமார், பற்குணராசா யோகேஸ்வரி, பிளேவியன் எக்ஸ் பெடித்கிறேசியன், கார்த்திகேசு தில்லையம்பலம், அந்தோனிப்பிள்ளை கிளபோடாசியஸ், சீனிவாசகம் சிறிமகாதேவன்,

பாவா ஷாகிப் மௌஹிமீன் சராபுல் அனாம், திருநாவுக்கரசு சிவதாசன், துரைசிங்கம் தெட்சணாமூர்த்தி, மொஹமட் மீரா சாஹிப் முஸ்தபா, அஸ்கர் நூமி பதுர்தீன், மீரா சாஹிப் மொஹமட் றமீஸ், இராஜதுரை இரத்தினேஸ்வரன், சுதர்சிங் விஜியக்காந், முருகையா கோமகன், இந்திரராசா நிராமுலன், சுவிகரன் நிஷாந்தன், செல்வராசா இரமணன், சலீம் முகமது நகுபர், அரியரெட்ணம் பிரஷாந்தன், விற்றாலில் டிரோன், தவராசா அஜந்தகுமார், ஜேசுதாசன் டெல்சன், பத்மநாதன் றொபின் றோய், அஜ்மயீன் அஸ்பர்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்று தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யவுள்ளனர். (ந-5)

## வணங்கா...

தெரிவிக்கையில்,

இலங்கை ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ தலைமையிலான இலங்கை அரசின் குழு, போரினால் இடம்பெயர்ந்த மக்களுக்காக திரட்டப்பட்ட நிவாரணப் பொருட்களைக் கொண்ட கப்டன் அலி (வணங்கா மண்) என்ற கப்பலில் இருந்து பொருட்களை ஏற்பதற்கு இந்திய அரசின் வேண்டுகோளின் பேரில் இணங்கியுள்ளது.

இந்தப் பொருட்களை இந்திய செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்று இலங்கைக்கு அனுப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார். (ந-5,14)


திறப்பு விழா அழைப்பு

இன்று (25.06.2009) காலை 7.30 தொடக்கம்
8.55 மணிவரை உள்ள
சுபமுகூர்த்த வேளையில்
எமது மூன்றாவது கிளையினை
மானிப்பாயில் ஆரம்பிக்கின்றோம்.
இந்நிகழ்வில் எமது அனைத்து
வாடிக்கையாளர்களையும் கலந்து
சிறப்பிக்குமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்,
பிரதேச சபை முன்பாக,
யாழ் வீதி,
மானிப்பாய்.

(C-2669)


# இலங்கைக்கு உலக வங்கி 24 மில்லியன் டொலர் உதவி

சர்வதேச அபிவிருத்தி அமையத்தின் திட்டத்திற்கு அமைய உலக வங்கி இலங்கைக்கு 24 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்கவுள்ளது.

வடக்கு கிழக்கில் அண்மைய காலங்களில் போர்ச் சூழல் காரணமாக இடம் பெயர்ந்தவர்களின் சுகாதார சேவைகளின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் இலங்கை அரசிற்கு உதவும் பொருட்டு இந் நிதியுதவி அளிக்கப்படவுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

யுத்தம் முடிந்த நிலையில் தற்போது இலங்கை மீளக் குடியேற்றம் மற்றும் மீள் கட்டுமானங்கள் சமாதானத்தை கட்டி எழுப்புவதில் சவால்களை எதிர்நோக்கியுள்ளது. இந் நிலையில் உடனடித் தேவையானது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் உள்ளக இடம் பெயர்தலுக்குள்ளாகி தற்காலிக முகாம்களில் வசிக்கும் மக்களுக்கான சுகாதார சேவைகள் வழங்குவதாகும்.

உலக வங்கியின் இவ் உதவி பற்றி கருத்து வெளியிட்டுள்ள இலங்கைக்கான இயக்குநர் நவோகா இஷி இந் நிதியுதவியின் அரைப் பகுதி அதாவது 12 மில்லியன் டொலர் அண்மைய யுத்த காலத்தில் உருவாகியுள்ள வட கிழக்குக்கான விசேட சுகாதார நெருக்கடிகளை தீர்த்து வைக்க பயன்படுத்தப்படவுள்ளது எனத் தெரிவித்தார்

அத்துடன் வரும்காலத்தில் வட கிழக்கின் சுகாதார தேவைகளில் தங்கியுள்ள முக்கியமான நடவடிக்கைகளுக்கு தமது திட்டம் நிதியுதவி அளிக்கவுள்ளது எனவும் இதில் இடம் பெயர்ந்தவர் முகாம்களில் நடமாடும் சிகிச்சை நிலையங்கள், அங்கவீனர்களின் மீள் வாழ்வு, அதிர்ச்சியுற்ற மக்களுக்கான சிகிச்சை மற்றும் முன்னுரிமை அளிக்க வேண்டிய உடனடி தேவைகள் என்பன அடங்கும் எனவும் குறிப்பிட்டார்.

தற்போது சுகாதார சேவை அபிவிருத்திக்கு உலக வங்கியால் அனுமதி அளிக்கப்பட்டுள்ள 24 மில்லியன் டொலர் உதவி கடந்த 15 ஆம் திகதி வழங்கத் தீர்மானிக்கப் பட்ட60 மில்லியன் டொலருக்கு மேலதிகமானது என்பதுடன் இவ் நிதியுதவி மாகாண மற்றும் மாவட்ட சுகாதார திட்டங்களை விஸ்தரிக்கவும் சுகாதார சேவைகளை நடைமுறைப்படுத்தவும் தொடச்சியாக உதவவுள்ளதுடன் சுகாதார சேவையின் தரத்தை உயர்த்தவும் புதுமைப் படுத்தவும் சுகாதார பணியாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கவும் மருத்துவ உபகரணங்கள் மற்றும் விநியோகங்களை மேற்கொள்ளவும் உதவும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ் உதவித்திட்டம் இலங்கையின் சுகாதார மற்றும் போசாக்கு அமைச்சின் வினைத்திறனைக் கூட்டும் எனவும் இதன் அடிப்படையில் திட்டமிடல், மேற்பார்வை, முகாமைத்துவங்கள் என்பவற்றில் வினைத் திறன் அதிகரிக்கப்படும் எனவும் கூறப்படுகின்றது.

## புலிகள் மீதான தடையை...

கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டும் என்றார்.

மோதல்களின் முடிபின்போது மோதல் பகுதிகளிலிருந்து பொதுமக்களை வெளியேறவிடாது விடுதலைப் புலிகள் தடுத்து வைத்திருந்தனர். பொதுமக்கள் இருக்கும் பகுதிகளில் இருந்து தாக்குதல்களை நடத்தி பொதுமக்களை ஆபத்துக்குள் தள்ளியிருந்தனர்.

இந்த உத்திகளையே கடந்த 30 வருடங்களில் அவர்கள் கையாண்டிருந்தனர். ஆனால் லிபியாவைப் பொறுத்தவரையில் அந்த நாடோ அல்லது அமைப்போ தமது பயங்கரவாதப் பாதையிலிருந்து மாறியிருந்தது.

அவ்வாறான மாற்றமொன்று ஏற்படுமா? என்பதையே அவதானிக்கவேண்டியுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

1997ஆம் ஆண்டு முதல் விடுதலைப் புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பாக அமெரிக்காவால் தடைசெய்யப்பட்டது எனச் சுட்டிக்காட்டிய அவர், எதிர்வரும் 5 வருடங்களுக்கு விடுதலைப் புலிகள் மீதான தடையுத்தரவை நீக்குவதில்லையெனத் தீர்மானித்திருப்பதாகக் கூறினார்.

கடத்தல்கள், குண்டுத்தாக்குதல்கள், தற்கொலைத் தாக்குதல்கள் போன்ற அவர்களின் பயங்கரவாதத் தாக்குதல்ளை தாம் கண்டிப்பதாகவும் நாடு கடந்த அரசாங்கமொன்றை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை எனவும் அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு அப்பால் பார்த்தால் இலங்கையில் தீர்க்கப்படவேண்டிய பல விடயங்கள் இருப்பதாகக் குறிப்பிட்ட அவர், இடம்பெயர்ந்தவர்களின் மனித உரிமைகள், காயமடைந்தவர்களுக்கான மருத்துவத் தேவைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டியுள்ளது எனத் தெரிவித்தார்.

அதேநேரம் சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி இலங்கைக்குக் கிடைப்பதை அமெரிக்கா தடுக்காது எனவும் இந்தக் கடனுதவி கிடைப்பதற்கு அமெரிக்கா உதவிகளைச் செய்யும் எனவும் அவர் கொழும்பு ஊடகமொன்றிடம் கூறினார். (ந-5)

## 180 நாட்களில் நலன்புரி...

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் அடங்கிய குழுவினர் இந்திய வெளியுறவு அமைச்சரை நேற்று புதுடில்லியில் சந்தித்தனர்.

இச்சந்திப்புக் குறித்து ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே இந்திய வெளியுறவு அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

கச்சதீவில் இராணுவக் கட்டுமான அமைப்புக்கள் எதனையும் உருவாக்கப் போவதில்லை என்று இலங்கை அரசு எமக்குத் தெளிவாகக் கூறியுள்ளது என்றும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வட இலங்கையில் போரினால் இடம்பெயர்ந்த மக்களை விரைவாக மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவது மற்றும் அவர்களது மறுவாழ்வு குறித்து நான் இலங்கை குழுவினரிடம் கேட்டேன்.

இலங்கை அரசு முன்பு குறிப்பிட்டது போல 180 நாட்களில் நலன் புரி முகாம்களை மூடிவிட்டு அங்கிருக்கும் மக்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவோம் என்று உறுதியளித்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியமர்த்துதல் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளிற்கு இந்தியா உதவியளிக்கும்.

நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் உதவுவதற்கும் இந்தியா உறுதியாக இருக்கிறது.

இலங்கை அரசு 13-வது திருத்தச் சட்டத்திற்கும் மேற்பட்ட ஒரு உத்தேசத் திட்டத்தை அமுல்படுத்தும் நோக்கில் இருப்பதாக எனக்கு உறுதியளித்தது.

இலங்கையில் மோதல்கள் முடிபுக்கு வந்துவிட்ட நிலையில் ஒரு புதிய தொடக்கத்திற்கான சந்தர்ப்பம் ஒன்று அங்கு உருவாகியுள்ளது.

அங்கு அனைத்துத் தரப்பு மக்களிற்கும் அதன் மூலமாக இந்த பிராந்தியம் முழுவதற்கும் மேலும் நல்லதொரு எதிர்காலத்தை கட்டியமைப்பதற்கான ஒரு சந்தர்ப்பம் உருவாகியிருக்கிறது என்பதையும் நான் அவர்களிற்கு சுட்டிக்காட்டியுள்ளேன் என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா குறிப்பிட்டார். (ந-5,14)


பழவம் விற்பனையாகிறது

சமூக சேவைகள், சமூக நலன்புரி அமைச்சின்சமூகசேவைகள்திணைக்களத்தில் சிற்றூழியர் வகுப்பு III பதவிக்கு (ஆண்/பெண்) வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு.

முடிவுத்திகதி:- 02.07.2009

தொ.பே. :- 6693, 2423, 4374

பூபாலசிங்கம் புத்தகசாலை
இல. 04, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C-2668)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும் பாடசாலையின் வளர்ச்சிக்காக அரும் பாடுபட்டவருமான

**பண்டிதர் அ.செல்லத்துரை**

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயரமடைவதுடன் அவரின்பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
திருநெல்வேலி

(C-2670)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.06.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.